SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

தமிழின் குரலாய் அக்கினி Akkini fm

07 புதன்கிழமை அக்டோபர் 2026 | 07 Wednesday October 2026

Switzerland Edition


Food is our trade · World is our Market
Sai Trader since 1991 GmbH
Importeur für frische, exotische Gemüse | Früchte & Fische
Aufeldstrasse 9 • 5417 Turgi
Tel. 044 885 86 50 • Fax 044 885 86 61
www.saitrader.ch • info@saitrader.ch
உணவுப்பொருட்களின் இறக்குமதியாளரும், மொத்த விற்பனையாளரும்.

SPITEX UNICARE AG
076 581 44 45
spitexunicare.ch
MENSCHLICH • ZUVERLÄSSIG • IN IHRER REGION

MULTI CONSULTING
Versicherungen & Finanzen
வீடு வாங்க • விற்க
வங்கிக்கடன் • காப்புறுதிகள்
079 765 50 57

impOrtas
International Foods & Beverages
CASH & CARRY • GROSSHANDEL

ZÜRICH RETAIL SHOP
Importas Cash & Carry
Baslerstrasse 102, 8048 Zürich
(80 m vom Letzipark)
TEL +41 43 343 03 55
FAX +41 43 343 03 56
EMAIL info@importas.ch
OPENING HOURS
Mon-Fri 10:00-20:00
Sat 09:00-18:00

BERN RETAIL SHOP
Importas Cash & Carry
Kranichweg 8, 3074 Muri bei Bern
TEL +41 31 951 24 44
EMAIL bern@importas.ch
OPENING HOURS
Mon-Fri 09:00-19:00
Sat 08:00-18:00

www.importas.ch
உலகின் சுவைகள் உங்களுக்கு அருகில்

VTS Finance GmbH
IMMOBILIEN
HYPOTHEKEN & FINANZIERUNGEN
VERSICHERUNGEN
KREDITE
078 920 58 58

AADAA FINANCE GmbH
aaDaa Finance
உங்கள் எதிர்காலத்திற்கு சரியான நிதித் திட்டமிடல்!
தனிநபர் கடன்
Privatkredit
CHF 3'000 – 250'000
ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்
மருத்துவக் காப்பீடு
Krankenkasse
அடிப்படை மற்றும் கூடுதல் காப்பீடு
பிரீமியம் ஒப்பீடு • ஆலோசனை
ஆயுள் காப்பீடு
Lebensversicherung
Säule 3a • 3b • Risiko
குடும்பப் பாதுகாப்பு • ஓய்வுக்காலத் திட்டம்
தனிப்பட்ட ஆலோசனை • Switzerland முழுவதும் சேவை
079 800 01 00
ஆலோசனைக்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள்!
www.aadaafinance.ch

TAMINAA
AYURVEDIC WELLNESS
Hegibachstrasse 34B
8032 Zürich
Schweiz

ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
Tovilistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch

SKY AUTO AG
SKY Auto AG
Libellenweg 21
3006 Bern
Hotline: 031 930 70 80

தகவல் கணனி
தொழில்நுட்ப நிலையம்
புதிய கணனி வகுப்புகள் ஆரம்பம்
Seebahnstrasse 231, 8004 Zürich
Mano
043 811 80 90

Pickeed

SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




07 புதன்கிழமை அக்டோபர் 2026 | 07 Wednesday October 2026 | Switzerland Edition

# உலகத் தமிழர்களுக்கு நம்பிக்கை அளிக்க சுவிஸ் தமிழர்களால் முடியும்

## சுவிசில் அருட்தந்தை ஜகத் கஸ்பர் ராஜ்

(சுபீட்சம் வேதாந்தி)

சுவிட்சர்லாந்தில் வாழும் ஒரு இலட்சம் தமிழர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால், உலகத் தமிழர்களுக்கு நம்பிக்கையை உருவாக்க முடியும் என அருட்தந்தை ஜகத் கஸ்பர் ராஜ் தெரிவித்தார்.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE



வீடியோவை பார்வையிட CLICK HERE

# வடக்கின் பொருளாதார வளர்ச்சியும் இளைஞர் அரசியல் தலைமையும் காலத்தின் தேவை!

## சுவிசில் கந்தையா பாஸ்கரன்



தொழில் முதலீடு, ஏற்றுமதி மற்றும் கல்வி மேம்பாட்டை இணைத்த புதிய அணுகுமுறைக்கு வலியுறுத்தல்

தமிழர் தாயகத்தின் முன்னேற்றத்திற்கு தொழில் மற்றும் நிதிக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதுடன், இளைஞர்களுக்கு அரசியல்

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE




## இயற்கைப் பால் உற்பத்தியாளர்களுக்கு கிலோவுக்கு 3 ராப்பன் கூடுதல் விலை

Switzerlandஇல் இயற்கை விவசாய முறையில் உற்பத்தி செய்யப்படும் Bio பாலுக்கான கொள்முதல் விலை, 2026 ஒக்டோபர் 1 முதல் கிலோ கிராமுக்கு 3 ராப்பன் உயர்த்த ப்பட்டுள்ளது.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

# ஆண்டு இறுதியில் பதவி விலகுகிறார் கை பார்மெலின்: புதியவர்கள் பொறுப்பேற்க வேண்டிய நேரம் வந்துவிட்டது

ஒக்டோபர் 2026 – சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சித் தலைவர் கை பார்மெலின் (Guy Parmelin), இந்த ஆண்டு இறுதியில் கூட்டாட்சி அமைச்சரவையிலிருந்து பதவி விலகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

# இரட்டைக் குடியுரிமை ரத்து விதிகளை தீவிரப்படுத்த சுவிஸ் அரசு பரிசீலனை



பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்ட கடுமையான குற்றங்களுடன் தொடர்புடைய இரட்டைக் குடியுரிமையாளர்களின் சுவிஸ் குடியுரிமையைப்

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

# உலகத் தமிழர்களுக்கு நம்பிக்கை அளிக்க சுவிஸ் தமிழர்களால் முடியும்

## சுவிசில் அருட்தந்தை ஜகத் கஸ்பர் ராஜ்

தொழில்முனைவோர், தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகத் தலைவர்களை ஒன்றிணைக்கும் 'The RISE Pre-Summit Switzerland' நிகழ்வு, அக்டோபர் 2ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை சூரிச்சில் நடைபெற்றது. The RISE Switzerland தலைவர் டாக்டர் ஸ்ரீ ராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் 2000ம் ஆண்டிலிருந்து ஈழத்தமிழர்ரகளுக்காக பயணம் 2009 இல் ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்ட துயரம்தான் என்னை ஏீமின் அமைப்புக்கு அழைத்தது. 2009 அழிவை தடுத்து நிறுத்த ஏன் நமக்கு நண்பர்கள் இல்லை என்ற கேள்வி எழுந்தது.

அப்பாவி மக்கள் படுகொலையானபோது ஏன் இந்த சமுகம் தடுத்து நிறுத்தவில்லை.








அதை தடுத்து நிறுத்துமளவுக்கு நமக்கு வலிமையான நண்பர்கள் இருக்கவில்லை. வல்லமை உள்ளவர்களாக நாம் இருக்கும்போதுதான் வலிமையான நண்பர்கள் நமக்கு உதவ வருவார்கள்.

தமிழர்களை நாம் வளர்த்துவிடவேண்டும் 100 பில்லியனர்களை வளர்த்துவிட்டால் 10பேராவது சமுகத்திற்கு சரியான வழிகாட்டிகளாக இருப்பார்கள் இத்தேடலின் விளைவே எழுமின்( Rise) அமைப்பாகும்.

ஈழத்தமிழர்களுக்கு உலக அளவில் ஒரு வலிமை வேண்டும் என்றால் நாம் அறிவுச்சமுகமாகவும் பொருளாதாரத்தில் வலிமை மிக்க சமுகமாகவும் திகழவேண்டும்.

போரால் தாயகத்தை விட்டு வெளியேறிய ஈழத்தமிழர்கள், கடந்த இருபத்தைந்து முதல் முப்பது ஆண்டுகளில் தமது அடையாளத்தைத்

# உலகத் தமிழர்களுக்கு நம்பிக்கை அளிக்க சுவிஸ் தமிழர்களால் முடியும்

## சுவிசில் அருட்தந்தை ஜகத் கஸ்பர் ராஜ்





தக்கவைத்துக்கொண்டு, தொழில் மற்றும் பொருளாதாரத் துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றம் பெருமைக்குரியது.

2009ஆம் ஆண்டு ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்ட பேரழிவு, உலக அளவில் தமிழர்களுக்கு வலிமையான நட்புறவுகளும் ஆதரவு வலையமைப்பும் ஏன் இருக்கவில்லை என்ற கேள்வியைத் தனக்குள் எழுப்பியதாக தெரிவித்த அருட் தந்தை தமிழர்கள் அறிவிலும் பொருளாதாரத்திலும் வலிமையான சமூகமாக வளர வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

ஒருவரையொருவர் வளர்த்தெடுப்பதே The RISE அமைப்பின் நோக்கம் எனக் குறிப்பிட்ட அவர், தொழில் வாய்ப்புகளுடன் சமூக அக்கறை, பரிவு மற்றும் பரஸ்பர ஆதரவையும் வளர்க்க வேண்டும் என்றார். இதில் சுவிஸ் தமிழ்த் தொழில்முனைவோர் சமூகம் முன்னுதாரணமாகச் செயல்பட வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.







உலகத் தமிழர்கள் சந்திக்கும் பண்பாட்டு மையமாக, குற்றாலத்துக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் 'தமிழூர்' உருவாக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். அங்கு 'Swiss Tamil International House' அமைப்பதற்கான எண்ணம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், தமிழினத்திற்காக உழைத்தவர்களையும் உயிர்த்தியாகம் செய்தவர்களையும் நினைவுகூரும் அணையா விளக்கை அமைக்கத் திட்டமிடப்படுவதாகவும் தெரிவித்தார்.

கடந்தகாலத் துயரங்கள் முன்னேற்றத்தைத் தடுத்துவிடக் கூடாது என வலியுறுத்திய அவர், "நன்றாக வாழ்ந்து காட்டுவதே நம்மை அழிக்க நினைத்தவர்களுக்கு நாம் அளிக்கக்கூடிய மிகப்பெரிய பதில்" எனத் தெரிவித்தார். எதிர்காலத் தலைமுறையின் எழுச்சிக்கு இன்றைய தமிழர்கள் முன்னோடிகளாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# வடக்கின் பொருளாதார வளர்ச்சியும் இளைஞர் அரசியல் தலைமையும் காலத்தின் தேவை!

## சுவிசில் கந்தையா பாஸ்கரன்



தலைமையில் இடமளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் கல்வி மேம்பாட்டை ஒருங்கிணைத்த அரசியல் அணுகுமுறை அவசியம் என தொழிலதிபர் கந்தையா பாஸ்கரன் தெரிவித்தார்.

சுவிஸ்ட்ஸர்லாந்தில் போராட்ட படக்காட்சியின் நிகழ்வில் கலந்து கொண்டபோது ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

சூரிச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

வடக்கில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் புலம்பெயர் தமிழர்கள் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்தில் நிறுவனங்களைத் தொடங்கினாலும், பொருத்தமான பணியாளர்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் இருப்பதாகவும், தனது தொழில் முயற்சியிலும் இத்தகைய நிலையை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் பொருளாதாரப் பங்களிப்பை உயர்த்துவதற்கு உடனடி மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் தேவை எனக் கூறிய அவர், பிராந்தியத்தில் உள்ள வளங்களை அடையாளம் கண்டு, அவற்றை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளாக மாற்ற வேண்டும் என வலியுறுத்தினார்.

கடலட்டை உள்ளிட்ட கடல்வளங்கள் வடக்கில் உற்பத்தி செய்யப்பட்டாலும், அவற்றின் பதப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிச் செயற்பாடுகள் பிற பகுதிகளில் நடைபெறுவதாக அவர் சுட்டிக்காட்டினார். இத்தகைய பதப்படுத்தல் நிலையங்களை வடக்கிலேயே அமைப்பதன் மூலம், உள்ளூரில் கூடுதல் பொருளாதார மதிப்பையும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்க முடியும்.

முன்னர் இயங்கிய பெரிய தொழிற்சாலைகள் வழங்கிய வேலைவாய்ப்புகளை நினைவுகூர்ந்த அவர், வடக்கில் மீண்டும் குறிப்பிடத்தக்க தொழில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். கடல்வளம், விவசாயம் மற்றும் உணவுப் பதப்படுத்தல் போன்ற துறைகளில் உற்பத்தியை விரிவுபடுத்தி, ஏற்றுமதிக்கான பொருட்களை உருவாக்க வேண்டும்.

இந்தியச் சந்தையின் வாய்ப்புகளை ஆராய்வதுடன், புலம்பெயர் தமிழர்களின் தொழில் அனுபவம், முதலீடு மற்றும் சர்வதேசத் தொடர்புகளை வடக்கின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார். வெளிநாடுகளிலிருந்து மூலப்பொருட்களைப் பெற்று, இலங்கையில் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வது போன்ற தொழில் மாதிரிகளின் சாத்தியக்கூறுகளையும் ஆராய வேண்டும் என முன்மொழிந்தார்.

இதனுடன், தமிழர் அரசியல் தலைமையிலும் தலைமுறை மாற்றம் ஏற்பட வேண்டும். இளைஞர்கள் அரசியலில் பங்கேற்பதற்கும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கும் தற்போதைய தலைமைகள் வாய்ப்பளிக்க வேண்டும் என்றும், நீண்டகாலமாகப் பதவிகளில் நீடிக்கும் போக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# ஆண்டு இறுதியில் பதவி விலகுகிறார் கை பார்மெலின்



## “புதியவர்கள் பொறுப்பேற்க வேண்டிய நேரம் வந்துவிட்டது”

பத்து ஆண்டுகளுக்கும் மேலான தனது பதவிக்காலத்தை நிறைவு செய்யும் அவர், புதியவர்கள் பொறுப்பேற்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாகக் கூறியுள்ளார்.

Nau.ch ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில், பதவி விலகுவதற்கான காரணங்களையும் அரசியல் வாழ்வின் மறக்க முடியாத அனுபவங்களையும் பார்மெலின் பகிர்ந்துகொண்டார்.

கடந்த ஓகஸ்ட் மாதத்திலிருந்து பதவியில் தொடர்வதா என்பது குறித்து சிந்தித்ததாகவும், முன்னைய ஆண்டுகளில் இருந்த அதே உற்சாகத்தை தற்போது உணரவில்லை என்றும் அவர் தெரிவித்தார். மனைவியுடன் இது குறித்து பலமுறை கலந்துரையாடியிருந்தாலும், இறுதி முடிவை ஒக்டோபர் முதலாம் திகதி மாலையில்தான் அவரிடம் கூறியதாகக் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான ஒப்பந்தங்கள் தொடர்பான முக்கிய விவாதங்களுக்கு மத்தியில் அவர் பதவி விலகுவது குறித்த கேள்விக்கு, அரசாங்கத்தின் ஒவ்வொரு விவகாரமும் கூட்டாட்சி அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு எனப் பதிலளித்தார். அமைச்சரவை ஒரு குழுவாகச் செயற்படுவதாகவும், ஒருவர் விலகும்போது மற்றொருவர் பொறுப்பேற்பார் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தனது பதவிக்காலத்தைத் திரும்பிப் பார்த்த பார்மெலின், கொரோனா பெருந்தொற்றுக் காலம் மிகவும் சவாலானதாக இருந்தது எனக் கூறினார். அப்போது முன்னாள் கூட்டாட்சி அமைச்சர் அலேன் பெர்சேயுடன் நடைபெற்ற விவாதங்கள் சுவாரஸ்யமாகவும், சில நேரங்களில் கடினமாகவும் இருந்ததாக நினைவுகூர்ந்தார். அடுத்து என்ன நடக்கும் என்பது தெரியாத சூழலில், அமைச்சரவைக்குள் தீவிரமான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றதாகத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் பங்கேற்ற ஜெனீவா உச்சிமாநாடும் தனது முக்கிய நினைவுகளில் ஒன்று எனக் குறிப்பிட்டார். உலக ஊடகங்கள் முன்னிலையில் பேச வேண்டியிருந்ததால், அந்தச் சந்திப்புக்காக மிகக் கவனமாகத் தயாரானதாக அவர் கூறினார்.

கருத்து மோதல்களுக்குப் பின்னர் மீண்டும் இணைந்து பழகும் அமைச்சரவை ஒரு குடும்பத்தைப் போன்றதா என்ற கேள்விக்கு, “ஆம்; ஆனால் சில நேரங்களில் சற்றுச் சிக்கலான குடும்பம்” எனப் புன்னகையுடன் பதிலளித்தார்.

பதவி விலகியதும் உடனடியாகப் புதிய பொறுப்புகளை ஏற்காமல், மனைவியுடன் நேரம் செலவிட விரும்புவதாக பார்மெலின் தெரிவித்தார். வாசிப்பு, இசை நிகழ்ச்சிகள் மற்றும் நடைப்பயிற்சிக்கு நேரம் ஒதுக்கவுள்ளதாகவும், பின்னர் வேறு பணிகளில் ஈடுபடுவது குறித்து முடிவெடுக்கவுள்ளதாகவும் கூறினார்.

# இரட்டைக் குடியுரிமை ரத்து விதிகளை தீவிரப்படுத்த சுவிஸ் அரசு பரிசீலனை




பறிக்கும் விதிகளை மேலும் கடுமையாக்கக் கோரும் தீர்மானத்திற்கு Switzerland மாநிலங்களவை ஆதரவு வழங்கியுள்ளது.

SVP கட்சியின் பேர்ன் மாநில உறுப்பினர் Werner Salzmann முன்வைத்த தீர்மானம், ஒக்டோபர் 1ஆம் திகதி 25 ஆதரவு, 17 எதிர்ப்பு வாக்குகளுடன் ஏற்கப்பட்டது.

கடுமையான குற்றங்கள் அல்லது பயங்கரவாதக் குற்றங்களில் தண்டிக்கப்பட்டவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதுடன், சாத்தியமான பயங்கரவாத அச்சுறுத்தலாகக் கருதப்படும் இரட்டைக் குடியுரிமையாளர்களையும் நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் எனத் தீர்மானம் கோருகிறது. அடுத்து தேசிய அவை இதைப் பரிசீலிக்கவுள்ளது.

### தற்போதும் குடியுரிமையைப் பறிக்கச் சட்டத்தில் இடமுள்ளது

சுவிஸ் குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 42 மற்றும் தொடர்புடைய ஒழுங்குவிதியின் பிரிவு 30 ஆகியவற்றின் கீழ், Switzerland இன் நலன்கள் அல்லது நற்பெயருக்குக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் குறிப்பிட்ட செயல்களில் ஈடுபட்ட இரட்டைக் குடியுரிமையாளர்களின் குடியுரிமையைப் பறிக்க முடியும்.

சம்பந்தப்பட்ட கண்டோனின் ஒப்புதலுடன், குடியேற்றத்திற்கான அரச செயலகமான SEM இந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம். பொதுவாக இறுதியான குற்றவியல் தண்டனைத் தீர்ப்பு அவசியம்; வெளிநாட்டில் குற்றவியல் நடவடிக்கையை முடிக்க முடியாத குறிப்பிட்ட சூழ்நிலைகளில் விதிவிலக்குகள் உள்ளன. குடியுரிமைப் பறிப்பு கடைசி வழிமுறையாகப் பயன்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கை என SEM விளக்குகிறது.

### தமிழ்ச் சமூகத்தினர் அறிய வேண்டியது

சுவிஸ்-இலங்கை உள்ளிட்ட இரட்டைக் குடியுரிமை கொண்டிருப்பது மட்டும் குடியுரிமைப் பறிப்பிற்கான காரணமல்ல. இந்த முன்மொழிவு அனைத்து இரட்டைக் குடியுரிமையாளர்களையும் பொதுவாகப் பாதிக்கும் நடவடிக்கையாக அறிவிக்கப்படவில்லை.

மேலும், B அல்லது C குடியிருப்பு அனுமதி வைத்திருப்பவர்களின் நிலையும், சுவிஸ் குடியுரிமை கொண்டவர்களின் நிலையும்

வேறுபட்டவை. குடியுரிமைப் பறிப்பு, குடியிருப்பு அனுமதி ரத்து மற்றும் நாட்டைவிட்டு வெளியேற்றம் ஆகியவை தனித்தனி சட்ட நடவடிக்கைகளாகும்.

“சாத்தியமான பயங்கரவாத அச்சுறுத்தல்” என்பதற்கான இறுதியான சட்ட வரையறை மற்றும்நடைமுறைகள் தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் இனி குடியுரிமை பறிக்கப்படும் என்று முடிவுசெய்ய முடியாது.

**மேலும் இரண்டு தீர்மானங்கள் நிராகரிப்பு**

இதற்கிடையில், ஓராண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத்தண்டனை பெற்ற வெளிநாட்டவர்களை வெளியேற்றும் நிபந்தனைகளைக் கடுமையாக்கக் கோரிய தீர்மானத்தையும், கூட்டாட்சி புகலிட மையங்களை அமைப்பதற்கு உள்ளூராட்சிகளுக்கு மறுப்புரிமை வழங்கக் கோரிய தீர்மானத்தையும் மாநிலங்களவை நிராகரித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான அகதி அங்கீகார நடைமுறையை மறுபரிசீலனை செய்யக் கோரும் மற்றொரு தீர்மானம் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது என வழங்கப்பட்ட செய்தி தெரிவிக்கிறது.




இதனை Bio Suisse அமைப்பின் அறிவிப்பு உறுதிப்படுத்துகிறது.

வறட்சி, கால்நடைத் தீவனப் பற்றாக்குறை மற்றும் விளைச்சல் இழப்பால் விவசாயிகளின் செலவுகள் அதிகரித்துள்ளன. அதேவேளை, இயற்கைப் பால் பொருட்களுக்கான தேவை உயர்வாகத் தொடர்கிறது. இந்த நிலையில், விவசாயிகள் உற்பத்தியைத் தொடர ஊக்குவிக்கவும், கறவை மாடுகளின் எண்ணிக்கை மேலும் குறைவதைத் தடுக்கவும் விலை உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.






# சுக் கண்டோன் அரசின் ஏழு உறுப்பினர்களும் மீண்டும் தேர்வு

சுக்: Switzerlandஇன் சுக் (Zug) கண்டோனில் ஒக்டோபர் 4ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில், தற்போதைய அரசின் ஏழு உறுப்பினர்களும் முதல் சுற்றிலேயே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் 2027-2030 பதவிக்காலத்திலும் அரசின் கட்சி அமைப்பு மாற்றமின்றித் தொடரவுள்ளது.

Mitte கட்சி மூன்று இடங்களையும், FDP மற்றும் SVP கட்சிகள் தலா இரண்டு இடங்களையும் தக்கவைத்துள்ளன. Mitte சார்பில் Laura Dittli, Andreas Hausheer, Silvia Thalmann-Gut; FDP சார்பில் Andreas Hostettler, Florian Weber; SVP சார்பில் Stephan Schleiss, Heinz Tännler ஆகியோர் மீண்டும் தெரிவாகியுள்ளனர்.

தேர்தலில் வாக்குப்பதிவு 47.6 சதவீதமாக இருந்தது. வெற்றிபெற்ற ஏழு உறுப்பினர்களும் தேவையான அறுதிப் பெரும்பான்மையான 12,891 வாக்குகளை எட்டியிருந்தனர்.

பசுமைக் கட்சியின் Andreas Lustenberger அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றபோதிலும், வாக்கு எண்ணிக்கையில் எட்டாவது இடத்தில் இருந்ததால் அரசில் இடம்பெறும் வாய்ப்பை இழந்தார்.

Importas Cash & Carry

உலகின் சுவை உங்களுக்கு அருகில்!

ZÜRICH RETAIL SHOP
Importas Cash & Carry
Only 80 m from Letzipark
Baslerstrasse 102
8048 Zürich
Tel: +41 43 343 03 55
Fax: +41 43 343 03 56
Email: info@importas.ch
OPENING HOURS
Mon–Fri 10:00–20:00
Sat 09:00–18:00

BERN RETAIL SHOP
Importas Cash & Carry
Kranichweg 8
3074 Muri bei Bern
Tel: +41 31 951 24 44
Email: bern@importas.ch
OPENING HOURS
Mon–Fri 09:00–19:00
Sat 08:00–18:00

www.importas.ch


MULLTI CONSULTING
Versicherung & Finanz
IHR PARTNER FÜR
IMMOBILIEN
VERSICHERUNG
FINANZ
SICHER. PERSÖNLICH. FÜR IHRE ZUKUNFT.
வீடு வாங்க விற்க
வங்கிக்கடன்
காப்புறுதிகள்
வருமான வரிப்படிவம் நிரப்புதல்
சமூக அக்கறை
எமது இலக்கு!
உங்கள் வீட்டையும்,
உங்கள் குடும்பத்தையும்,
உங்கள் எதிர்காலத்தையும் பாதுகாப்போம்.
079 765 50 57
Jetzt kontaktieren
Im Rietpark 5
8180 Bülach ZH
srasan@hotmail.com
info@multiconsulting.ch
Besuchen Sie unsere Website.
www.multiconsulting.ch


SKY AUTO AG
சுவிற்சர்லாந்தில் உங்களுக்கு பிடித்த வாகனம் எந்த Brandல் எங்கிருந்தாலும் உடனே ஒழுங்கு செய்து உங்கள் கைகளுக்கே கொண்டுவந்து தரும் முதல் தமிழர் நிறுவனம்
Express Credit அல்லது Leasing சேவை
குறைந்த வட்டி வீதம் மற்றும் காப்புறுதியோடு உங்கள் வாகனம் உங்கள் கைகளில்
தொடர்புக்கு 031 930 70 80
Libellenweg 21
3006 Bern
www.sky-auto.ch


Sj
சிறி ஜுவல்லரி
உங்கள் ரசனைக்கேற்ப புதிய தங்க நகைகளை வாங்கவும் புதிய டிசைன்களில் ஆபரணங்களை செய்து கொள்ளவும், பழைய தங்கங்களை உருக்கி, புதிய தங்க நகைகள் செய்து கொள்ளவும், விரைவாக திருத்த வேலைகளும் செய்தும் தரப்படும்.
நகைத்தொழிலில் நீண்ட காலம் அனுபவம் பெற்ற நாங்கள் தாலிக்கு பொன் உருக்கி வைரதாலிக்கொடி செய்து தருகிறோம்.
வைர தாலி கொடி. மோதிரம், வளையல், பெயர் பெண்டன் மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
SRI JEWELLERY
Mattengasse 17, 8005 Zurich
043 366 80 09
info@srijewellery.ch
079 898 51 01


Aathi
RESIDENCIES
Alles Garden, Trincomalee
LUXURY APARTMENTS FOR SALE
Experience a new lifestyle at Alles Garden, Trincomalee's premium residences.
Pay just 30% now
Balance payable monthly with 0% interest
Book Your Site Visit Today
Mr. Srikaran
+41 79 136 4465
+94 77 710 0050


ellaalan Fresh
Zürich நகரில் ஞாயிற்றுக்கிழமைகளிலும்
உங்களுக்குத்தேவையான
இறைச்சி, மீன், அரிசி, மற்றும்
உடனடி மரக்கறிகள், மலிகைப்பொருட்களை
பெறவேண்டுமா எங்களிடம் வாருங்கள்.
இறைச்சி
மீன்
புதியது • சவை
அரிசி
சத்தமானது
மரக்கறிகள்
புதிய • சத்தான
அனைத்தும்
ஒரே இடத்தில்
ATTA RICE
BASMATI RICE
SEERAGA SAMBA RICE
Sunflower Oil
SWISS MILK
ZUCKER SUCRE ZUCCHERO
TATA TEA
Maggi
Moteren Strasse 9,
8005 Zürich.
TEL
044 543 48 84
ஞாயிற்றுக்கிழமைகளிலும்
திறந்திருக்கும்!
FRESH QUALITY BEST PRICE
Freshness You Can Trust, Quality You Deserve!


rib
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
உங்கள் கணக்குகள் – எங்கள் பொறுப்பு!
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நம்பகமான மற்றும் தொழில்முறை கணக்கியல் சேவைகள்.
கணக்குப் பதிவு – Buchhaltung
வருடாந்த கணக்கு முடிப்பு – Jahresabschluss
MWST / VAT கணக்கீடு
சம்பள கணக்கீடு – Lohnbuchhaltung
Quellensteuer
நிறுவன ஆரம்பம் மற்றும் நிர்வாக ஆலோசனை
வணிகம் மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகள்
துல்லியம் • நம்பிக்கை • தனிப்பட்ட சேவை
உங்கள் வியாபார வெற்றிப் பயணத்தில் நம்பிக்கையான துணையாக...
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
Tovilistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch


STRAVEL
Your Journey Our Care
Year End
Sale
இலங்கைக்கு..
620 CHF
40 Kilo
Sri Lanka
Always a good idea
Home is closer than you think
Travel Brings Us Closer
அழையுங்கள்
044 419 91 00
079 913 77 59
Luisenstrasse 41, 8005 Zurich
www.stravel.ch
info@stravel.ch

# நிலநடுக்க மீட்புக்கு சூரிச்சில் புதிய அணிகள்

## 30 லட்சம் பிராங்குகள் ஒதுக்கீடு




நிலநடுக்கத்தால் கட்டட இடிபாடுகளில் சிக்குபவர்களை விரைவாகக் கண்டறிந்து மீட்பதற்காக, சூரிச் மாநிலம் தனது குடிமைப் பாதுகாப்புப் பிரிவை வலுப்படுத்துகிறது. மீட்பு உபகரணங்கள் மற்றும் வாகனங்களுக்காக 30 லட்சம் சுவிஸ் பிராங்குகளை மாநில அரசு அனுமதித்துள்ளது.

தலா சுமார் 30 உறுப்பினர்களைக் கொண்ட இரண்டு சிறப்பு மீட்பு அணிகள் உருவாக்கப்படவுள்ளன. மாநிலத்தின் இராணுவ மற்றும் குடிமைப் பாதுகாப்பு அலுவலகம் இந்த அணிகளை அமைத்து, நிலநடுக்கத்துக்குப் பின்னரான மீட்புப் பணிகளுக்குப் பயிற்சி வழங்கும்.

புதிய உபகரணங்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளை அணுகவும், இடிபாடுகளில் சிக்கிய மனிதர்கள் மற்றும் விலங்குகளைக் கண்டறியவும், தடைகளை அகற்றி அவர்களை மீட்கவும் உதவும். கொள்முதல் நடவடிக்கைகள் 2026 முதல் 2028 வரை படிப்படியாக மேற்கொள்ளப்படும். நிலநடுக்கத்துக்குப் பின்னர் சிக்கியவர்களை விரைவாகக் கண்டுபிடிப்பது உயிர்களைக் காப்பாற்றுவதில் முக்கியமானது என பாதுகாப்புத்துறை இயக்குநர் Mario Fehr தெரிவித்துள்ளார்.

ETH சூரிச்சின் சுவிஸ் நிலநடுக்கச் சேவை, மக்கள் மற்றும் கட்டடங்கள் அதிகமாக உள்ள நகரங்களில் நிலநடுக்கத்தின் பாதிப்புகள் பெரிதாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறது.

# ஐந்து ஆண்டுகளில் சுவிஸ் குடியுரிமை: முன்முயற்சியை நிராகரிக்க நாடாளுமன்றம் பரிந்துரை




சுவிட்சர்லாந்தில் குடியுரிமை பெறுவதற்கான நடைமுறையை எளிமைப்படுத்தவும், நாடு முழுவதும் ஒரே மாதிரியான விதிகளை ஏற்படுத்தவும் கோரும் “ஜனநாயக முன்முயற்சியை” நிராகரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பரிந்துரைத்துள்ளன. இது மக்களின் இறுதி முடிவு அல்ல; முன்முயற்சி மக்கள் வாக்கெடுப்புக்கு வரும்.

செப்டம்பர் 24 அன்று மாநிலங்களவையில் நடைபெற்ற வாக்கெடுப்பில், நிராகரிப்புப் பரிந்துரைக்கு 34 உறுப்பினர்கள் ஆதரவளித்தனர். ஒன்பது பேர் எதிர்த்தனர்; இருவர் வாக்களிப்பதைத் தவிர்த்தனர். தேசிய அவை ஏற்கெனவே ஏப்ரல் மாதத்தில் இதே நிலைப்பாட்டை எடுத்திருந்தது.

“Aktion Vierviertel” அமைப்பின் முன்முயற்சி, ஐந்து ஆண்டுகள் சட்டபூர்வமாக சுவிட்சர்லாந்தில் வசித்தவர்களுக்கு, ஒரு தேசிய மொழியின் அடிப்படை அறிவு, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லாமை மற்றும் கடுமையான குற்றப் பின்னணி இல்லாமை ஆகிய நிபந்தனைகளுடன் குடியுரிமை பெறும் உரிமையை வழங்கக் கோருகிறது.

குடியுரிமைக்கான சட்ட விதிகளை கூட்டாட்சி அரசு நிர்ணயிக்க வேண்டும் என்றும், மாநிலங்கள் விண்ணப்ப நடைமுறைகளை நடத்தினாலும் தனித்தனி தகுதி விதிகளை வகுக்கக்கூடாது என்றும் முன்முயற்சி வலியுறுத்துகிறது.

எதிர்ப்பாளர்கள், வசிப்புக் காலத்தைக் குறைப்பதும் மாநில மற்றும் உள்ளூராட்சி விதிகளை நீக்குவதும் பொருத்தமற்றது எனக் கூறுகின்றனர். சமூக ஒருங்கிணைப்பு உள்ளூரிலேயே நடைபெறுவதால், அந்த அதிகாரங்கள் தொடர வேண்டும் என்பது அவர்களது நிலைப்பாடு.

முன்முயற்சியை ஆதரிக்கும் சமூக ஜனநாயகக் கட்சியும் பசுமைக் கட்சியும், தற்போதைய நடைமுறை செலவு மிக்கதாகவும் கடினமானதாகவும் இருப்பதாக விமர்சிக்கின்றன. இரண்டாம் தலைமுறையினருக்கும் நீண்டகாலமாக வசிப்பவர்களுக்கும் எளிய நடைமுறையை வழங்கும் மாற்று முன்மொழிவுகளும் ஏற்கப்படவில்லை.

தற்போதைய சாதாரணக் குடியுரிமை விதிகள் தொடர்கின்றன: பொதுவாக பத்து ஆண்டுகள் வசிப்பதும் C குடியிருப்பு அனுமதியும் உள்ளிட்ட தகுதிகள் தேவை. முன்முயற்சி எதிர்முன்மொழிவு இன்றி மக்கள் வாக்கெடுப்புக்கு வரும்.

ஆதாரம்: சுவிஸ் நாடாளுமன்ற இணையதளத்தில் வெளியிடப்பட்ட செப்டம்பர் 24 செய்தி மற்றும் நாடாளுமன்றக் குழுவின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு.



SPITEX
UNICARE AG
உறவினரைப் பராமரிப்பவராக
(பராமரிப்பு உதவியாளராக)
பணியில் சேருங்கள்
உங்கள் அன்பானவர்களை பராமரித்து, அதற்கான நியாயமான ஊதியம் பெறுங்கள்!
மணிக்கு CHF 38.- ஊதியம்
நாங்கள் செயல்படும் 11 மாகாணங்கள்:
Aargau
Zürich
Schaffhausen
St. Gallen
Uri
Basel-Landschaft
Obwalden
Bern
Nidwalden
Luzern
Schwyz
உங்கள் வீட்டிலேயே பராமரிப்பு
நியாயமான ஊதியம்
தனிப்பட்ட ஆதரவு
இப்போது தொடர்புகொள்ளுங்கள்
076 581 44 45
மேலும் தகவல்களுக்கு
spitexunicare.ch
MENSCHLICH • ZUVERLÄSSIG • IN IHRER REGION




# சுக் மாநிலத் தேர்தல்: 20 இடங்களுடன் SVP முதலிடம்

சுக் (Zug) மாநிலத்தில் ஒக்டோபர் 4ஆம் திகதி நடைபெற்ற மாநில நாடாளுமன்றத் தேர்தலில், 80 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அனைத்து 11 நகராட்சிகளிலும் வாக்கு எண்ணிக்கை நிறைவடைந்துள்ள நிலையில், SVP கட்சி 20 இடங்களைக் கைப்பற்றி அதிக இடங்களைப் பெற்ற கட்சியாக உள்ளது.

Mitte கட்சி 18 இடங்களையும், FDP 17 இடங்களையும் பெற்றுள்ளன. மாற்று-பசுமைக் கூட்டணியான ALG 11 இடங்களையும், SP 8 இடங்களையும், GLP 6 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. wab.zug.ch மாநிலத்தில் வாக்களிக்கத் தகுதியுடைய 77,834 பேரில் 35,622 பேர் வாக்களித்துள்ளனர். மொத்த வாக்குப்பதிவு 45.77 சதவீதமாக அமைந்துள்ளது. புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் 22 பேர் பெண்கள்; 58 பேர் ஆண்கள்.

நகராட்சிகளில் வால்க்வில் பகுதியில் அதிகபட்சமாக 58.27 சதவீத வாக்குப்பதிவு பதிவாகியுள்ளது. சுக் நகரில் 46.36 சதவீதமும், சாம் பகுதியில் 40.07 சதவீதமும் வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது.

செய்தி ஆதாரம்: சுக் மாநிலத்தின் அதிகாரப்பூர்வத் தேர்தல் முடிவுகள்.


TAMINAA
AYURVEDIC WELLNESS
Natürliche Schmerzlinderung ohne Medikamente gegen Stress,
Rückenschmerzen, Nackenschmerzen, Schlafprobleme
DISCOUNT 25% OFF
BEST PRICE TREATMENT
Krankenkasse anerkannt!
Rückenschmerzen/ Nackenschmerzen
Stress
Migräne/ Kopfschmerzen
Entspannung
Migränelindernde
Stressabbau
Nacken/Rückenschmerzen
Schlafqualität
Buchen Sie jetzt und erhalten Sie 25 % Rabatt für November!
Nur für Sie!
Buchen Sie noch heute Ihren Termin!
+41 79 940 15 10
taminaa.ch
Hegibachstrasse 34B
8032 Zürich
Schweiz
Krankenkasse anerkannt!
WIR KOMMEN AUCH ZU IHNEN NACH HAUSE, INS BÜRO ODER INS HOTEL
ZUHAUSE Hausbesuch
BÜRO Firmenbesuch
HOTEL Hotelbesuch
+41 79 940 15 10
taminaa.ch
Hegibachstrasse 34B 8032 Zürich Schweiz
TAMINAA – Ihre Gesundheit in besten Händen


சுபீட்சம்
SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE
பத்திரிகை
வேதாந்தி : 004178 6264375
supeedsam@gmail.com
வாரத்தில்ஒருமுறை
உங்கள் கரங்களில்
மின்னிதழாக...
சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில்
இணைய இங்கே தொடவும்....
CLICK HERE

# பழமையான கைத்தொழிலுக்கு உயிரூட்டிய விழா: Zziwil கிராமத்தில் திரண்ட மக்கள்



விளக்கப்படம்

பேர்ன் மாநிலத்தின் Zäziwil கிராமத்தில் செப்டம்பர் 30ஆம் திகதி நடைபெற்ற 70வது “Brächete” பாரம்பரிய விழா, பழைய கைத்தொழில்களையும் கிராமிய வாழ்வையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. இனிமையான இலையுதிர்கால வானிலையுடன் நடைபெற்ற விழாவுக்கு ஏராளமானோர் வருகை தந்ததாக BERN-OST செய்தி தெரிவிக்கிறது.

விழாவின் முக்கிய அம்சமாக, ஆளிச் செடியிலிருந்து (Flachs) லினன் துணி தயாரிக்கும் பாரம்பரிய முறைகள் நேரடியாகச் செய்து காட்டப்பட்டன. தண்டுகளை உடைத்து நாரைப் பிரித்தல், நாரைச் சீவுதல் மற்றும் நூல் நூற்றல் போன்ற பணிகளைப் பார்வையாளர்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர். சிறுவர்களும் பழைய தொழில்நுட்பங்கள் குறித்து அறிந்து கொண்டனர்.

கைத்தொழில் நிகழ்ச்சிகளுடன் இசை, உணவுக் கடைகள் மற்றும் கிராமியச் சந்தையும் விழாவுக்கு வண்ணம் சேர்த்தன. உள்ளூர் நிர்வாகத்தின் நிகழ்ச்சித் திட்டத்தில் 90க்கும் மேற்பட்ட சந்தைக் கடைகள் இடம்பெற்றிருந்தன. பிராந்திய உணவுகளும் பாரம்பரியப் பொருட்களும் பார்வையாளர்களைக் கவர்ந்தன.

முன்னொரு காலத்தில் விவசாயக் குடும்பங்களின் அன்றாட வாழ்வோடு இணைந்திருந்த ஆளிநார் பதப்படுத்தும் வழக்கம், காலப்போக்கில் மறையத் தொடங்கியது. இதனைப் பாதுகாக்கும் நோக்கில் 1955ஆம் ஆண்டு Zäziwil மக்களால் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. தற்போது இந்த விழா, பேர்ன் மாநிலத்தின் வாழும் பாரம்பரியங்களின் பட்டியலிலும் இடம்பெற்றுள்ளது.

இவ்வாண்டின் 70வது நிகழ்வை முன்னிட்டு, விழாவின் வரலாற்றுப் புகைப்படங்களைக் கொண்ட சிறப்புக் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனை ஒக்டோபர் 14ஆம் திகதி பிற்பகல் 2 முதல் 4 மணி வரை பார்வையிடலாம் என உள்ளூர் நிர்வாகம் அறிவித்துள்ளது.



தகவல் கணனி
தொழில்நுட்ப நிலையம்
உங்கள் எதிர்காலத்திற்கு ஒரு புதிய துவக்கம்!
புதிய கணனி வகுப்புகள் ஆரம்பம்
எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விசேட சலுகைகள், ஊக்குவிப்புகள் எம்மால் வழங்கப்படுகின்றன.
அறிவு உங்கள் வெற்றியின் அடித்தளம்!
கணனி வகுப்புகள்
ECDL • SIZ • Windows 11
Word • Excel • PowerPoint • Access
W
X
P
A
Learn
Create
Grow
NEW CLASS – ECDL
சனி 09:30 – 11:00
ஞாயிறு 09:30 – 11:00
NEW CLASS – A+
புதன் 18:00 – 20:00
Schnuppern • Zukunftstag • Lehrstellen • Praktikum
இன்றே பதிவு செய்யுங்கள்!
Seebahnstrasse 231, 8004 Zürich
Mano
043 811 80 90


LAMELLE GLASS
& STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
சுவிஸின் ஒரே தமிழ்
கண்ணாடித் தொழிற்சாலை!
சுவிட்சர்லாந்து முழுவதும் சேவை
எந்த இடத்திலும், எந்த நேரத்திலும்!
உங்கள் வீட்டின் அழகையும்
பாதுகாப்பையும் அதிகரிக்க,
உயர்தர கண்ணாடிகளை நாமே
தயாரித்து நேரடியாகப்
பொருத்தித் தருகிறோம்.
BEST PRICE
எமது சேவைகள்:
• ஜன்னல் மற்றும் கதவு கண்ணாடிகள்
• குளியலறை கண்ணாடித் தடுப்புகள் (SHOWER GLASS)
• பால்கனி மற்றும் பாதுகாப்பு வேலி கண்ணாடிகள்
• சமையலறை அலங்காரக் கண்ணாடிகள்
சிறப்பம்சங்கள்:
• இலவச மதிப்பீடு (GRATIS OFFERTE) — உங்கள் இடத்திற்கே வந்து அளவீடு செய்வோம்.
• சொந்தத் தயாரிப்பு — மிகக் குறைந்த விலை, சிறந்த தரம்.
• நாடெங்கும் சேவை — ஜெனிவா உட்பட சுவிஸின் அனைத்துப் பகுதிகளுக்கும்.
உங்கள் தேவைகளை தமிழில் பேசி, தரமாகப் பெற்றிடுங்கள்!
VERNIER
48, Chemin Delay, 1214 Vernier
info@lamelle-glass.ch
GENÈVE
27, Rue du Grand-pré, 1202 Genève
info@lamelle-glass.ch
NYON
8, Rue de la Colombière, 1260 Nyon
nyon@lamelle-glass.ch
இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்:
PRABA +41 79 416 76 96 www.lamelle-glass.ch


7/24
DEPANNAGE URGENCE
022 782 08 88
LAMELLE GLASS
& STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
info@lamelle-glass.ch
www.lamelle-glass.ch - 48, Chemin Delay - 1214 Vernier


ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
NOLIMIT ONE
GmbH
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
CRAFTER
MASTER
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch


தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE


Siva Ship Cargo
மாதாந்த கப்பல் பொதிச் சேவை
Swiss to Sri Lanka
எமது அடுத்த கப்பல சேவை
26.10.2026
காலங்கள் பல கரைந்தோடினாலும்
தாய் மண்ணின் உறவுகளை மறவாத எம் தேசத்து உறவுகளே!
உங்கள் உணாவின் அர்ப்பணிப்புத்தான் நொந்துநிற்கும்
எம் தாயக உறவுகளின் வாழ்வாதாரம்.
உங்கள் பாவனைகளின் பின்பு வீடுகளில் உறங்கிக்கடக்கும் சகல் பொருட்களையும் எம் தேசத்தின் பாச உறவுகளை நினைத்து எம்மிடம் ஒப்படையுங்கள். உங்கள் பாசம் கலந்த பொருட்களை எம் தேசத்தின் உங்கள் உறவுகளின் வீட்டு வாசல் வரை தேடிச் சென்று பாதுகாப்பாக அவர்கள் கைகளில் ஒப்படைப்போம்.
உங்கள் உயர்வான நம்பிக்கையோடு சுவிஸ்சில் 17 வருடங்களாக கப்பல் பொதிச் சேவையை நடாத்திவரும் தமிழர் நிறுவனமான
Siva Ship Cargo வை நீங்களும் நாடுங்கள்.
அனுப்பக்கூடிய பொருட்கள்
உணவுப் பொருட்கள்
உடுப்புக்கள்
தளபாடங்கள்
கட்டில் மெத்தை
ரிவி
பிரிச்
சைக்கிள்
போன்ற சகல பொருட்களும்
யாழ்ப்பானம்
கொழும்பு
079 605 85 48 / 076 779 50 04


VM Cars
9 SEATER VAN
FOR RENT
Perfect for families, friends & groups
VM Cars
9 SEATS
EXTRA LONG VERSION
AUTOMATIC
REAR PARKING SENSORS
PER DAY CHF
130.-
400 KM PER DAY
UNLIMITED KM ON REQUEST
WEEKLY RENTAL WITH DISCOUNT ON REQUEST
BOOK NOW
WhatsApp +41 79 510 21 68
vmcars.ch@gmail.com
Instagram VMCars.ch
Spreitenbach AG / Dietikon ZH


VTS
Finance GmbH
IMMOBILIEN • HYPOTHEKEN • FINANZIERUNGEN • VERSICHERUNGEN
IHRE ZIELE.
UNSERE LÖSUNGEN.
Kompetent, persönlich und zuverlässig –
für Ihre finanzielle Zukunft.
IHRE ZUKUNFT IN GUTEN HÄNDEN
NEU
IMMOBILIEN
Ihr Partner rund um Immobilien
Kauf & Verkauf
Immobilienvermitttung
Bewertung
Beratung bei Wohn- und Renditeobjekten
HYPOTHEKEN & FINANZIERUNGEN
Individuelle Lösungen zu besten Konditionen
Hypotheken für Wohneigentum
Hypothekenablösungen & Aufstockungen
Bau- & Renovations-Finanzierungen
Firmenfinanzierungen
Privatkredite
VERSICHERUNGEN
Optimaler Schutz für Sie und Ihre Liebsten
Krankenversicherungen
Lebensversicherungen
Vorsorge 3a & 3b
Fahrzeugversicherungen
Hausrat- & Privathaflpflichtversicherungen
Gebäudeversicherungen
Firmen- & Geschäfts-versicherungen
KREDITE
Schnell, unkompliziert und diskret
Privatkredite
Konsumentenkredite
Firmenkredite
Liquiditätslösungen
PERSÖNLICHE BERATUNG
Individuell auf Ihre Bedurnisse abgestistmmt.
KOMPETENZ & ERFAHRUNG
Jahrelange Erlahrung und fundiertes Inow-how.
ZUVERLÄSSIG & TRANSPARENT
Faire Lösungen und klare Kommunikation.
SICHERHEIT & VERTRAUEN
Ihre Zufniedheit is it unser oberstes Ziel.
WIR SCHAFFEN WERTE.
FÜR HEUTE UND MORGEN.
Ob Immobilie, Hypothek, Finanzierung oder Versicherung – wir begleiten Sie auf ihrem Weg zu finanzieller Sicherheit und nachhaltigem Erfolg.
Ganzheitliche Beratung
Beste Konditionen
Schnelle Abwicklung
Langfristige Partnerschaft
RUFEN SIE UNS AN
078 920 58 58
Wir sind gerne für Sie da.
SCHREIBEN SIE UNS
info@vtsfinance.ch
Wir antworten schnell.
V.T.S. Finance GmbH
Gartenstadtstrasse 5
3098 Köniz
Ihr Vertrauen. Unsere Verantwortung. Gemeinsam in eine sichere Zukunft.




# சூரிச்சில் சமூக ஒருங்கிணைப்புக்கான 20 புதிய இலக்குகள்:

## பாகுபாட்டைத் தடுப்பதற்கு முன்னுரிமை

பல்வேறு நாட்டுப் பின்னணிகளைக் கொண்ட மக்கள் இணைந்து வாழ்வதை வலுப்படுத்தும் நோக்கில், சூரிச் நகர நிர்வாகம் 2026-2030 காலப்பகுதிக்கான 20 சமூக ஒருங்கிணைப்பு இலக்குகளை ஏற்றுக்கொண்டுள்ளது. இதில் முதல்முறையாக, பாகுபாட்டைத் தடுப்பது தனியான முன்னுரிமையாக இடம்பெற்றுள்ளது. Nau.ch

சூரிச் நகர மக்களில் ஏறத்தாழ 45 சதவீதத்தினர் வெளிநாடுகளில் பிறந்தவர்கள். ஆண்டுதோறும் சுமார் 17,000 பேர் வெளிநாடுகளிலிருந்து நேரடியாக நகரில் குடியேறுகின்றனர். இந்தப் பன்முகச் சமூகத்தில் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளையும் சேவைகளையும் வழங்குவதையே புதிய இலக்குகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. Nau.ch

நகரச் சேவைகளை அனைவரும் சமமாகப் பெறுதல், பொருளாதார மற்றும் சமூக வாழ்வில் பங்கேற்பை அதிகரித்தல், வரவேற்பும் அங்கீகாரமும் கொண்ட சூழலை உருவாக்குதல், பாகுபாட்டைத் தடுத்தல் மற்றும் இணைந்து வாழ்வதில் ஏற்படும் சவால்களை முன்கூட்டியே அணுகுதல் ஆகிய ஐந்து முக்கிய திசைகளில் இந்த இலக்குகள் அமைந்துள்ளன.

டிஜிட்டல் தொடர்பான அம்சங்களும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. திட்டங்களை நகரின் திணைக்களங்களும் சேவைப் பிரிவுகளும் நடைமுறைப்படுத்தவுள்ளன. தேவையான ஆதரவை பன்முகத்தன்மை, ஒருங்கிணைப்பு மற்றும் இனவெறி எதிர்ப்புக்கான நகரப் பிரிவு வழங்கும். Nau.ch

இதேவேளை, தேசிய அளவில் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்த, 2028-2032 காலப்பகுதிக்கு 334.5 மில்லியன் பிராங்குகள் ஒதுக்குவதற்கான முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது. மொழிக் கற்றல், தகவல் மற்றும் ஆலோசனைச் சேவைகள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இணைவதற்கான உதவிகள் ஆகியவற்றிற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும். wbf.admin.ch

இதில் ஆண்டுக்கு 37.3 மில்லியன் பிராங்குகள் மாநில ஒருங்கிணைப்புத் திட்டங்களுக்கும், 29.6 மில்லியன் பிராங்குகள் தேசிய முக்கியத்துவமுள்ள திட்டங்களுக்கும் செலவிடப்படவுள்ளன. பெண்கள் எதிர்கொள்ளும் தடைகளைக் குறைப்பதும், கல்வி வாய்ப்புகள் மூலம் நிலையான வேலைவாய்ப்பை உருவாக்குவதும் முன்னுரிமைகளாக உள்ளன.


Where Every Sparkle Celebrates You & Empowers Another.
அழகு
அழகை மட்டும் அல்ல...
உங்கள் நம்பிக்கையையும்
வலிமையையும்
வெளிப்படுத்தும்
ஒரு பொக்கிஷம்!
SHREE
BRIDAL JEWELLERY
மங்களகரமான
கோலாகல
திறப்பு விழா
சுவிஸ் நாட்டில் முதல் முறையாக
பிரமாண்டமான அளவில் ஆரம்பிக்கும்
கவரிங் நகைக்கான பொக்கிஷங்கள்
உங்கள் மனதிற்கு ஏற்ற டிசைன்கள்
நீங்கள் விரும்பிய வடிவங்கள்
நவீன ரக டிசைன்கள்
பல வருட உத்திரவாதத்துடன் கூடிய நகைகள்
தரமும் உறுதியும் நிறைந்த கண் கவர் டிசைன்கள்
தினசரி அணியும் நகைகள் முதல் திருமண நகைகள் வரை எல்லாம் ஒரே இடத்தில்...
திறப்பு விழா நாள்
20
OCTOBER
2026
செவ்வாய்க்கிழமை
திறப்பு விழாவை முன்னிட்டு
விசேட
விலைக் கழிவுகள்
வழங்கப்படுகின்றன!
அனைவரும் வருகைக்கு...!
அழகின் பயணத்தில் இணைந்திடுங்கள்...!
ஹாரங்கள்
ஜிமிக்கி
வளையல்கள்
மோதிரங்கள்
ஒட்டியாணம்
செயின்கள்
குழந்தைகள் நகைகள்
திருமண நகைகள்
Fluhmühlerain 1a,
6015 Luzern
Mobil:
+41 79 847 02 90
Luzern

# பொலிசார் மீது துப்பாக்கிச் சூடு - 19 ஆண்டுகள் 8 மாதங்கள் சிறைத்தண்டனை கோரும் அரசுத் தரப்பு

சூரிச் மாநிலத்தின் வாட் (Watt) பகுதியில் இரு பொலிசார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 51 வயதான வடக்கு மாசிடோனிய நாட்டவருக்கு, 19 ஆண்டுகள் 8 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்குமாறு அரசுத் தரப்பு வழக்கறிஞர் கோரியுள்ளார்.

ஒக்டோபர் 5ஆம் திகதி திங்கட்கிழமை, டீல்ஸ்டோர்ஃப் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பலமுறை கொலை முயற்சியில் ஈடுபட்டமை, அதிகாரிகள் மற்றும் அரச ஊழியர்களுக்கு எதிராக வன்முறை மற்றும் அச்சுறுத்தல் விடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் அவரைத் தண்டிக்கவும், 15 ஆண்டுகள் சுவிட்சர்லாந்திலிருந்து நாடுகடத்தவும் அரசுத் தரப்பு கோரியுள்ளது.

குற்றப்பத்திரிகையின்படி, 2024 ஜனவரி 17ஆம் திகதி இரவு சுமார் 10.45 மணியளவில், குடியிருப்புப் பகுதியில் ஒரு ஊசியிலை மரத்தின் கீழ் நின்றிருந்த அவர், இரு மாநிலப் பொலிசாரை நோக்கி ஐந்து அல்லது ஆறு தடவைகள் சுட்டதாகக் கூறப்படுகிறது. முன்னதாக, சந்தேகத்திற்குரிய நபர் ஒருவர் அங்கு நிற்பதாகப் பொலிசாருக்குத் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

பலத்த பாதுகாப்புடன் நடைபெற்ற நீதிமன்ற விசாரணையில், பங்கேற்ற அனைவரும் பாதுகாப்புச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். குற்றஞ்சாட்டப்பட்டவரை அழைத்து வந்த பொலிசார் முகங்களை மறைத்திருந்தனர்.

இது அரசுத் தரப்பின் தண்டனைக் கோரிக்கையாகும்; நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு இந்தச் செய்தியில் தெரிவிக்கப்படவில்லை.

# Giarsinom ஓநாய்க் கூட்டத்தை முழுமையாகச் சுட்டுக்கொல்ல அனுமதி




கிராவ்புண்டன் மாநிலத்தின் கீழ் எங்கடின் பகுதியில் உள்ள Giarsinom ஓநாய்க் கூட்டத்தை முழுமையாகச் சுட்டுக்கொல்ல, மத்திய சுற்றுச்சூழல் அலுவலகம் (BAFU) ஒப்புதல் வழங்கியுள்ளது. மாநிலத்தின் கோரிக்கைக்கு செப்டம்பர் 23ஆம் திகதி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வப் பதிவு தெரிவிக்கிறது.

இந்த ஓநாய்க் கூட்டம், செர்னெஸ் (Zernez) நகராட்சிப் பகுதியில் கடந்த ஆகஸ்ட் மாதத்தின் முதல் பாதியில் அடையாளம் காணப்பட்டது. அதில் குறைந்தது மூன்று குட்டிகள் இருப்பதை வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் உறுதிப்படுத்தியிருந்தனர்.

ஆகஸ்ட் 27ஆம் திகதி வழங்கப்பட்ட ஆரம்ப அனுமதி, இவ்வாண்டு பிறந்த குட்டிகளில் மூன்றில் இரண்டு பங்கினைச் சுட்டுக்கொல்வதற்கானதாக இருந்தது. பின்னர் செப்டம்பர் மாதத்தில், கூட்டம் முழுவதையும் அகற்றுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஓநாய் எண்ணிக்கைக் கட்டுப்பாட்டுக் காலம் 2027 ஜனவரி 31ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

ஆதாரங்கள்: மத்திய சுற்றுச்சூழல் அலுவலகம், கிராவ்புண்டன் வேட்டை மற்றும் மீன்பிடி அலுவலகம்.




# 13 வது AHV ஓய்வூதியத்திற்கு நிதி: VAT வரியை உயர்த்த திட்டம்

13வது AHV ஓய்வூதியத்திற்கான நிதியின் ஒரு பகுதியைத் திரட்டுவதற்காக, பெறுமதி சேர் வரியை (VAT) உயர்த்தும் திட்டத்தை மத்திய அரசு முன்வைத்துள்ளது. சுகாதார அமைச்சர் எலிசபெத் பௌமே-ஷ்னைடர் திங்கட்கிழமை அறிமுகப்படுத்திய இந்தத் திட்டம் குறித்து, நவம்பர் இறுதியில் மக்கள் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ள திட்டத்தின்படி, பொதுவான VAT விகிதம் 8.1 சதவீதத்திலிருந்து 8.5 சதவீதமாகவும்,



ஹோட்டல் தங்குமிடங்களுக்கான சிறப்பு வரி 3.8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகவும் உயர்த்தப்படும். உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கான குறைக்கப்பட்ட வரி, 2.6 சதவீதமாகவே தொடரும்.

13வது AHV ஓய்வூதியத்தை முதல்முறையாக வழங்குவதற்கு 4.2 பில்லியன் பிராங்குகள் செலவாகும். இதில் 1.4 பில்லியன் பிராங்குகளை இந்த வரி உயர்வின் மூலம் பெற அரசு எதிர்பார்க்கிறது.

இதற்கிடையில், FDP கட்சி இந்தத் திட்டத்திற்கு எதிரான பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது. வரி உயர்வு குடும்பங்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் கூடுதல் சுமையை ஏற்படுத்தும் எனக் கூறும் அக்கட்சி, அரசுச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் நிதியைப் பெற வேண்டும் என வலியுறுத்துகிறது.

இந்த வரி உயர்வு நடைமுறைக்கு வருமா என்பதை நவம்பர் இறுதியில் நடைபெறும் மக்கள் வாக்கெடுப்பு தீர்மானிக்கும்.

# சூரிச் முருகன் ஆலயம் இடமாற்றத்திற்குத் தயாராகிறது

## ஒக்டோபர் 31 வரை தற்போதைய இடத்தில் இயங்கும்

சூரிச்: சூரிச் முருகன் ஆலயம் தற்போது இயங்கிவரும் இடத்திலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. இருப்பினும், ஆலயம் மூடப்படவில்லை என்றும், 2026 ஒக்டோபர் 31ஆம் திகதி வரை தற்போதைய இடத்தில் தொடர்ந்து இயங்கும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளது.

சமய, கலாசார மற்றும் சமூக நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்குப் பொருத்தமான புதிய இடத்தை உறுதிசெய்யும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

புதிய இடம் இதுவரை உறுதிசெய்யப்படவில்லை. தேவையான நடவடிக்கைகள் நிறைவடைந்து, இடம் உறுதிசெய்யப்பட்டதும் அதன் விவரங்கள் அனைவருக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றக் காலப்பகுதியில் பக்தர்கள் பொறுமையுடனும் புரிந்துணர்வுடனும் இருந்து, ஆலயத்திற்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குமாறு நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. பக்தர்களின் பிரார்த்தனைகளும் ஆதரவும் ஆலயப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஊக்கமும் பலமும் அளிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.



# ஆரம்பப் பள்ளியில் பிரெஞ்சு மொழி:
## மத்திய அரசின் திட்டத்துக்கு ஆதரவும் எதிர்ப்பும்




சுவிட்சர்லாந்தில் ஆரம்பப் பள்ளியிலிருந்தே இரண்டாவது தேசிய மொழியைக் கற்பிப்பதைச் சட்டத்தில் உறுதிப்படுத்த மத்திய அரசு முன்வைத்துள்ள திட்டம், அரசியல் கட்சிகள் மற்றும் ஆசிரியர் அமைப்புகளிடையே விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

சில ஜெர்மன் மொழி பேசும் மாநிலங்களில் ஆரம்பப் பள்ளியில் பிரெஞ்சு கற்பிப்பதை மாற்றும் முயற்சிகளின் பின்னணியில், மத்திய அரசு இரண்டு முன்மொழிவுகளை முன்வைத்துள்ளது. முதலாவது திட்டம், ஆரம்பப் பள்ளிப் பருவத்தில் மற்றொரு தேசிய மொழியையும் ஆங்கிலத்தையும் கற்பிப்பதைச் சட்டத்தில் உறுதிப்படுத்துகிறது. இரண்டாவது திட்டம்,

இரண்டாவது தேசிய மொழியை ஆரம்பப் பள்ளியில் தொடங்கி கீழ்நிலை இடைநிலைக் கல்வி முடியும் வரை கற்பிக்க வேண்டும் எனக் கூறுவதுடன், மாநிலங்களுக்கு அதிக நடைமுறைச் சுதந்திரத்தையும் வழங்குகிறது.

சுவிஸ் ஆசிரியர் கூட்டமைப்பான LCH, இரண்டாவது திட்டத்தை நிபந்தனைகளுடன் ஆதரித்துள்ளது. மாணவர்களின் திறனுக்கு ஏற்ற கற்றல் இலக்குகள், போதுமான கற்பித்தல் வளங்கள் மற்றும் மொழிப் பிராந்தியங்களுக்கு இடையிலான பரிமாற்ற நிகழ்ச்சிகள் அவசியம் என அது வலியுறுத்துகிறது.

மறுபுறம், FDP கட்சி இரண்டு திட்டங்களையும் நிராகரித்துள்ளது. கல்வி தொடர்பான முடிவுகள் மாநிலங்களிடமே இருக்க வேண்டும் என்றும், மொழிப் பாடத்தை விரைவாகத் தொடங்குவதைவிட பள்ளிக் கல்வியின் முடிவில் மாணவர்கள் அந்த மொழியைப் பயன்படுத்தும் திறனைப் பெற்றிருக்க வேண்டும் என்பதே முக்கியம் என்றும் தெரிவித்துள்ளது.

SP கட்சி, ஆரம்பப் பள்ளியில் இரண்டாவது தேசிய மொழியை உறுதிப்படுத்தும் முயற்சியை வரவேற்றுள்ளது. பசுமைக் கட்சி, மாநிலங்களின் நடவடிக்கைகளைப் பொருட்படுத்தாமல் சட்டத் திட்டத்தை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் எனக் கோரியுள்ளது.

இந்த முன்மொழிவுகள் இன்னும் சட்டமாக அமுலுக்கு வரவில்லை. மாநிலங்கள் ஏற்கெனவே ஒப்புக்கொண்ட மொழிக் கல்வித் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தினால், சட்ட மாற்றத்தை முன்வைக்கப் போவதில்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

செய்தி ஆதாரங்கள்: மத்திய உள்துறைத் திணைக்களம் (EDI), LCH மற்றும் சம்பந்தப்பட்ட கட்சிகளின் அதிகாரப்பூர்வ அறிக்கைகள்.


SPONCERS
RANIYAN
சிவிஸ் தமிழ் TV
madras dosa
LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
தமிழ் அச்சகம்
AiYA
ஐயா
lets go
TRAVEL
AGP PRESENTS
TAMIL DREAM NIGHT
MUSIC EVENT - 2026
OCTOBER
11
2026
DOORS OPEN 16:30
MZA PARADIESLI
PARADIESLISTRASSE 9, 4663 AARBURG
VIP TICKET
55 CHF
ADULT TICKET
30 CHF
16 + Y
CHILD TICKET
15 CHF
5 - 16Y
ARUL : +41 76 441 69 14
GOBI : +41 78 918 58 62
PRABA : +41 79 416 76 96
Design & Print by : Speed Print 079 550 05 74

# சூரிச் விமான நிலையத்தில் 1,300 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் பறிமுதல் - 27 பேர் கைது




சூரிச் விமான நிலையத்தில் 2026ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில், 1,300 கிலோகிராமுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சூரிச் கன்டோன் பொலிஸார், சுங்கம் மற்றும் எல்லைப் பாதுகாப்புக்கான மத்திய அலுவலகத்துடன் (BAZG) இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளில் இவை கைப்பற்றப்பட்டதாக, ஒக்டோபர் 2ஆம் திகதி வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஜூலை முதல் செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் பறிமுதல் செய்யப்பட்டவை:

மரிஹுவானா: சுமார் 963 கிலோ
கொக்கெய்ன்: சுமார் 11 கிலோ
ஹஷிஷ்: சுமார் 14 கிலோ
காட் (Khat): 319 கிலோ
போதை காளான்கள்: சுமார் 500 கிராம்
மெத்தாம்பெட்டமின்: 75 கிராம்

கைது செய்யப்பட்டவர்களில் 18 ஆண்களும் 9 பெண்களும் அடங்குகின்றனர். இவர்கள் 15 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### லொலிப்பொப் இனிப்புகளுக்குள் கொக்கெய்ன்

ஒரு சம்பவத்தில், பயணியொருவரின் பயணப்பெட்டியிலிருந்த லொலிப்பொப் இனிப்புகள் மற்றும் பிற உணவுப் பொருட்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோவுக்கும் அதிகமான கொக்கெய்னை பொலிஸார் கண்டுபிடித்தனர். அந்தப் பயணி பிரேசிலின் சாவோ பாவ்லோவிலிருந்து டப்ளின் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான 15 சம்பவங்களில் பாங்கொக்கிலிருந்தும், நான்கு சம்பவங்களில் டெல் அவிவிலிருந்தும், மூன்று சம்பவங்களில் சாவோ பாவ்லோ விலிருந்தும் பயணிகள் சூரிச்சுக்கு வந்துள்ளனர். மேலும் ஹொங்கொங், டொரொன்டோ, புனோம் பென், பார்சிலோனா மற்றும் ஜொஹானஸ்பேர்க் ஆகிய நகரங்களிலிருந்து தலா ஒரு சம்பவம் பதிவாகியுள்ளது.

# சூரிச்-வின்டர்தூர் ரயில் பாதை விரிவாக்கம்: 3.3 பில்லியன் பிராங்க் செலவில் பத்து ஆண்டுகள் கட்டுமானம்




சூரிச்-வின்டர்தூர் இடையிலான ரயில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பெரும் விரிவாக்கத் திட்டத்தின் ஆரம்பப் பணிகள் இந்த ஆண்டு வசந்த காலத்தில் தொடங்கியுள்ளன. சுமார் பத்து ஆண்டுகள் நடைபெறும் கட்டுமானத்தைத் தொடர்ந்து, புதிய பாதை 2037 டிசம்பரில் பயன்பாட்டுக்கு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக ஒன்பது கிலோமீற்றர் நீளமான Brüttener-tunnel சுரங்கப்பாதை அமைக்கப்படவுள்ளது. தலா ஒரு ரயில் தடத்தைக் கொண்ட இரண்டு தனித்தனி சுரங்கங்களில், ரயில்கள் மணிக்கு அதிகபட்சம் 160 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்க முடியும்.

இதனுடன் Winterthur-Töss, Bassersdorf, Wallisellen, Dietlikon ஆகிய நான்கு ரயில் நிலையங்களும் விரிவாக்கப்படுகின்றன. திட்டத்தின் மொத்தச் செலவு 3.3 பில்லியன் சுவிஸ் பிராங்குகள். மத்திய அரசின் ரயில் உட்கட்டமைப்பு நிதியத்தின் ஊடாக இதற்கான நிதி வழங்கப்படுகிறது.

### பயணிகளுக்கு என்ன நன்மை?

தற்போது சூரிச்-வின்டர்தூர் பாதையில் தினமும் சுமார் 670 ரயில்களில் 120,000க்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர். விரிவாக்கத்துக்குப் பின்னர் நாளொன்றுக்கு 900 ரயில்களை இயக்கும் வசதி கிடைக்கும். இது சுமார் 30 சதவீத அதிகரிப்பாகும்.

புதிய சுரங்கப்பாதையால் சூரிச்-வின்டர்தூர் பயண நேரம் எட்டு நிமிடங்கள் வரை குறையும். பிராந்திய ரயில் சேவைகளை



15 நிமிட இடைவெளியில் இயக்குவதற்கும் வாய்ப்பு ஏற்படும். ரயில் இயக்கம் மேலும் சீராகி, சூரிச் பிராந்தியத்தின் ஏனைய பாதைகளிலும் தாமதங்கள் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குடியிருப்பாளர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள்

பல கட்டுமானத் தளங்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் இருப்பதால், சத்தம், தூசி, கனரக வாகனப் போக்குவரத்து மற்றும் அதிர்வுகளை முழுமையாகத் தவிர்க்க முடியாது என SBB தெரிவித்துள்ளது.

பகலில் ரயில்கள் இயங்குவதால் சில பணிகள் இரவு நேரங்களிலும் வார இறுதிகளிலும் மேற்கொள்ளப்படும். வரவிருக்கும் பணிகள் குறித்து அருகிலுள்ள குடியிருப்பாளர்களுக்குத் தொடர்ந்து தகவல் வழங்கப்படும் என்றும் SBB உறுதியளித்துள்ளது.

சுரங்கம் அமைக்கும்போது சுமார் 45 இலட்சம் தொன் அகழ்வுப் பொருட்கள் வெளியேற்றப்படும். இவை சரக்கு ரயில்கள் மூலம் சரளைக்கல் அகழ்வுக் குழிகளுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளன.

## கட்டுமானக் கால அட்டவணை

2027: பிரதான கட்டுமானப் பணிகள் ஆரம்பம்.

2029: சுரங்கத் துளையிடும் இயந்திரங்களின் பணிகள் ஆரம்பம்; முதலில் Dietlikon-Winterthur பகுதி அமைக்கப்படும்.

2032: Bassersdorf-Mülberg இணைப்புப் பகுதியின் துளையிடும் பணிகள் ஆரம்பம்.

2036: கட்டுமானத்தை முடித்து, புதிய பாதையில் சோதனைகள் மேற்கொள்ளத் திட்டம்.

2037 டிசம்பர்: புதிய கால அட்டவணையுடன் பாதை பயன்பாட்டுக்கு வரும்.

கட்டுமானத்தின்போது ரயில் சேவைகளில் ஏற்படும் இடையூறுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இருப்பினும், 2026 டிசம்பர் கால அட்டவணை மாற்றத்திலிருந்து சில S-Bahn சேவைகளில் மாற்றங்கள் ஏற்படும். பயணிகள் தங்களது பயண விவரங்களை SBB இணையத்தளம் அல்லது செயலியில் சரிபார்த்துக்கொள்ளலாம்.




# 2027 இல் மருத்துவக் காப்பீட்டுக் கட்டணம் 5% உயர்வு

## செலவைக் குறைப்பது எப்படி?

Switzerland இல் கட்டாய அடிப்படை மருத்துவக் காப்பீட்டுக்கான (KVG/LAMal) பிரீமியம், 2027ஆம் ஆண்டில் சராசரியாக 5% அதிகரிக்கிறது. அனைத்து வயதுப் பிரிவினரையும் உள்ளடக்கிய சராசரி மாதக் கட்டணம் 412 பிராங்காக இருக்கும். எனினும், காப்பீட்டுத் திட்டத்தைச் சரியாகத் தேர்ந்தெடுப்பதன் மூலம் செலவைக் குறைக்கலாம்.

### 1. பொருத்தமான Franchise தொகையைத் தேர்ந்தெடுங்கள்

Franchise என்பது, ஆண்டுதோறும் மருத்துவச் செலவில் முதலில் நீங்கள் செலுத்த வேண்டிய தொகையாகும். பெரியவர்களுக்கு இது 300 முதல் 2,500 பிராங்கு வரை உள்ளது.

மருத்துவச் செலவு குறைவாக இருப்பவர்களுக்கு 2,500 பிராங்கு Franchise பயனளிக்கலாம். தொடர்ந்து சிகிச்சை பெறுபவர்களுக்கு 300 பிராங்கு பொருத்தமாக இருக்கலாம். வயதை மட்டும் வைத்து முடிவெடுக்காமல், எதிர்பார்க்கப்படும் மருத்துவச் செலவையும் பிரீமியத்தையும் ஒப்பிட வேண்டும்.

Moneyland கணிப்பின்படி, ஆண்டுக்கு சுமார் 1,900 பிராங்குக்கு மேல் காப்பீட்டால் ஏற்கப்படும் மருத்துவச் செலவு இருந்தால், 300 பிராங்கு Franchise சாதகமாக இருக்கலாம். இந்த எல்லை காப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்து மாறும்.

2,500 பிராங்கு Franchise தேர்ந்தெடுப்பவர்கள், எதிர்பாராத மருத்துவச் செலவுக்காக 3,200 பிராங்கு வரை ஒதுக்கிவைத்திருப்பது நல்லது: Franchise 2,500 பிராங்கு மற்றும் வழக்கமான சுயபங்களிப்பு அதிகபட்சம் 700 பிராங்கு. மருத்துவமனைத் தங்குதலுக்கான கட்டணம் தனியாக இருக்கலாம்.

### 2. குறைந்த கட்டணமுள்ள காப்பீட்டு முறையைப் பரிசீலியுங்கள்

சுதந்திரமாக மருத்துவரைத் தேர்ந்தெடுக்கும் Standard திட்டத்தைவிட, குடும்ப மருத்துவர்,




HMO அல்லது Telmed திட்டங்களில் பிரீமியம் குறைவாக இருக்கலாம். இவற்றில் பொதுவாக முதலில் குறிப்பிட்ட மருத்துவர், மருத்துவ நிலையம் அல்லது தொலைமருத்துவச் சேவையைத் தொடர்புகொள்ள வேண்டும். திட்டத்தின் விதிமுறைகளை அறிந்து தேர்ந்தெடுக்கவும்.

### 3. விபத்துக் காப்பீட்டுக்கு இருமுறை பணம் செலுத்துகிறீர்களா?

ஒரே முதலாளியிடம் வாரத்திற்கு குறைந்தது எட்டு மணிநேரம் பணிபுரிந்தால், பணியிட மற்றும் ஓய்வுநேர விபத்துகளுக்கான காப்பீடு பொதுவாக முதலாளியின் காப்பீட்டில் கிடைக்கும். இதை உறுதிப்படுத்திய பின்னர், மருத்துவக் காப்பீட்டிலுள்ள விபத்துப் பாதுகாப்பை நீக்கக் கோரலாம்.

எட்டு மணிநேரத்திற்குக் குறைவாக வேலை செய்பவர்களுக்கு முதலாளியின் காப்பீடு பொதுவாக பணியிட விபத்துகளை மட்டுமே உள்ளடக்கும். எனவே, அவர்கள் மருத்துவக் காப்பீட்டிலுள்ள விபத்துப் பாதுகாப்பை நீக்குவதற்கு முன் கவனமாகச் சரிபார்க்க வேண்டும்.

### 4. மருத்துவ ரசீதுகளைச் சமர்ப்பிக்க மறக்காதீர்கள்

மருந்தகத்தில் அல்லது மருத்துவ நிலையத்தில் நீங்களே செலுத்திய, காப்பீட்டால் ஏற்கப்படக்கூடிய செலவுகளின் ரசீதுகளை உடனடியாகச் சமர்ப்பிக்கவும். மறந்துபோன அடிப்படை மருத்துவக் காப்பீட்டுக் கோரிக்கைகளைப் பொதுவாக சிகிச்சை நடந்த நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் சமர்ப்பிக்கலாம்.

### 5. முன்கூட்டியே செலுத்துவதற்கான தள்ளுபடியைக் கேளுங்கள்

சில காப்பீட்டு நிறுவனங்கள், அரையாண்டு அல்லது முழு ஆண்டுக்கான பிரீமியத்தை முன்கூட்டியே செலுத்தினால் 2% வரை தள்ளுபடி வழங்குகின்றன. உங்களது நிதிநிலைக்கு ஏற்றதாக இருந்தால், நிறுவனத்திடம் இந்த வசதி உள்ளதா எனக் கேளுங்கள்.

மேலும் கவனிக்க வேண்டியவை: குறைந்த வருமானம் உள்ளவர்கள், தமது கண்டோனில் Prämienverbilligung எனப்படும் பிரீமியம் மானியத்திற்கான தகுதியைச் சரிபார்க்கலாம். . 2027ஆம் ஆண்டுக்கான அடிப்படை காப்பீட்டை மாற்றுவதற்கு, ரத்துச் செய்யும் அறிவிப்பு 2026 நவம்பர் 30க்குள் தற்போதைய நிறுவனத்தைச் சென்றடைய வேண்டும்.

# Switzerland சிவில் மாற்றுச் சேவைக்கு 30 ஆண்டுகள்:

## ஆண்டுக்கு 7,000க்கும் அதிகமானோர் அனுமதி!




இராணுவச் சேவையை மனச்சாட்சிக் காரணங்களால் மேற்கொள்ள முடியாதவர்களுக்கான சிவில் மாற்றுச் சேவை (Zivildienst) Switzerland நாட்டில் நடைமுறைக்கு வந்து 30 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

1992ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுவாக்கெடுப்பில், இந்தச் சேவைக்கான அரசியலமைப்பு அடிப்படையை 82.5% மக்கள் ஆதரித்தனர். இதற்கான சட்டம் 1996 ஒக்டோபர் 1ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது.

1996இல் 96 பேர் அனுமதிக்கப்பட்ட நிலையில், 2025இல் இந்த எண்ணிக்கை 7,211 ஆக, சுமார் 75 மடங்கு அதிகரித்துள்ளது. 2009ஆம் ஆண்டு மனச்சாட்சிக் காரணங்களை விசாரணையில் நிரூபிக்கும் நடைமுறை நீக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, இராணுவச் சேவையைவிட ஒன்றரை மடங்கு அதிக நாட்கள் சிவில் சேவை செய்யத் தயாராக இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2025ஆம் ஆண்டில் சுமார் 19 இலட்சம் சேவை நாட்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதில் சமூகப் பணிகளுக்கு 50.4%, பாடசாலைகளுக்கு 18.1%, சுகாதாரத்துறைக்கு 14.8%, சுற்றுச்சூழல் மற்றும் இயற்கைப் பாதுகாப்புக்கு 9.6% பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து சிவில் சேவைக்கு மாறுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கும் சட்டத் திருத்தம், 2026 ஜூன் 14 பொதுவாக்கெடுப்பில் 52.46% ஆதரவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. புதிய விதிகளின்படி, மாறுபவர்கள் குறைந்தபட்சம் 150 நாட்கள் சிவில் சேவை செய்ய வேண்டும். மீதமுள்ள இராணுவச் சேவை நாட்களின் ஒன்றரை மடங்கு இதைவிட அதிகமாக இருந்தால், அந்த அதிகமான நாட்களையே நிறைவேற்ற வேண்டும்.

# 2027 ஜனவரி முதல் AHV/IV ஓய்வூதியம் உயர்வு

## குறைந்தபட்சம் 1,280 பிராங்குகள்




சுவிட்சர்லாந்தில் முதியோர் மற்றும் உயிரிழந்தவர்களின் சார்ந்தோருக்கான AHV ஓய்வூதியங்களும், மாற்றுத்திறனாளிகளுக்கான IV ஓய்வூதியங்களும் 2027 ஜனவரி 1ஆம் திகதி முதல் சுமார் 1.59 சதவீதத்தால் உயர்த்தப்படவுள்ளன. இதற்கான முடிவை மத்திய அரசு ஒக்டோபர் 2ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எடுத்துள்ளது.

முழுமையான பங்களிப்புக் காலத்திற்கான குறைந்தபட்ச மாதாந்த ஓய்வூதியம் 1,260 பிராங்குகளிலிருந்து 1,280 பிராங்குகளாகவும், அதிகபட்சம் 2,520 பிராங்குகளிலிருந்து 2,560 பிராங்குகளாகவும் அதிகரிக்கும். இதன்படி குறைந்தபட்ச ஓய்வூதியத்தில் மாதத்திற்கு 20 பிராங்குகளும், அதிகபட்சத்தில் 40 பிராங்குகளும் கூடுதலாகக் கிடைக்கும்.

விலைவாசி மற்றும் ஊதிய வளர்ச்சியின் சராசரியை அடிப்படையாகக் கொண்ட சட்டபூர்வமான கலப்புக் குறியீட்டின்படி இந்த மாற்றம் மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தச் சீரமைப்பு, இறுதியாக 2025ஆம் ஆண்டு செய்யப்பட்டிருந்தது.

ஓய்வூதிய உயர்வுடன் சமூகக் காப்புறுதிப் பங்களிப்புகளும் மாற்றப்படுகின்றன. சுயதொழில் செய்பவர்கள் மற்றும் தொழிலில் ஈடுபடாதவர்களுக்கான AHV/IV/EO குறைந்தபட்ச வருடாந்தப் பங்களிப்பு 530 பிராங்குகளிலிருந்து 541 பிராங்குகளாக உயரும். தன்னார்வ AHV/IV காப்புறுதிக்கான குறைந்தபட்சப் பங்களிப்பு 1,010 பிராங்குகளிலிருந்து 1,030 பிராங்குகளாக அதிகரிக்கும்.

தொழில்சார் ஓய்வூதியமான இரண்டாம் தூணிலும் மாற்றங்கள் இடம்பெறுகின்றன. கட்டாயக் காப்புறுதிக்கான வருடாந்தச் சம்பள நுழைவு வரம்பு 23,040 பிராங்குகளாகவும், ஒருங்கிணைப்புக் கழிவு 26,880 பிராங்குகளாகவும் உயர்த்தப்படுகிறது. இரண்டாம் தூண் காப்புறுதி உள்ளவர்களின் Säule 3a வரிக்கழிவுக்கான அதிகபட்ச வருடாந்த வரம்பு 7,373 பிராங்குகளாக உயரும். இரண்டாம் தூண் இல்லாதவர்களுக்கான அதிகபட்ச வரம்பு 36,864 பிராங்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் உதவித்தொகைகள் (EL) மற்றும் இடைக்கால உதவித்தொகைகள் (ÜL) கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் பொதுவாழ்க்கைச் செலவுக்கான வருடாந்தத் தொகையும் உயர்த்தப்படுகிறது. தனிநபருக்கு 21,000 பிராங்குகளும், தம்பதியருக்கு 31,500 பிராங்குகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இவை அனைவருக்கும் நேரடியாக வழங்கப்படும் ஒரே அளவிலான உதவித்தொகைகள் அல்ல; தகுதி மற்றும் உதவித்தொகையைக் கணக்கிடுவதற்கான அளவுகளாகும்.

ஓய்வூதிய உயர்வால் மொத்தமாக சுமார் 1.055 பில்லியன் பிராங்குகள் கூடுதல் செலவு ஏற்படும் என அரசு மதிப்பிட்டுள்ளது. இதில் AHV-க்கு 940 மில்லியன் பிராங்குகளும், IV-க்கு 115 மில்லியன் பிராங்குகளும் செலவாகும்

# சூரிச்சில் நவம்பர் 1 ஆம் திகதி ‘வெள்ளிவீதி’ இலக்கியக் கூடுகை

## ஆறு படைப்பாளிகளுடன் உரையாடல்




Switzerland, சூரிச் நகரில் ‘வெள்ளிவீதி’ இரண்டாவது இலக்கியக் கூடுகை, எதிர்வரும் நவம்பர் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

சூரிச் Wiedikon ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள Birmensdorferstrasse 67, 8004 Zürich என்ற முகவரியில் நடைபெறும் இந்நிகழ்வில், ஆறு படைப்பாளிகளுடனான உரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

காலை 9.30 மணிக்கு காலை உணவுடன் நிகழ்வு ஆரம்பமாகும். காலை 9.45 மணிக்கு கபிலன் தொடக்கவுரை ஆற்றுவார். அதனைத் தொடர்ந்து நடைபெறும் அமர்வுகளின் விபரம்:

காலை 10 மணி: காயத்ரி ஆர். – பொறுமையற்றவர்கள்

காலை 11 மணி: தில்லை – தாயைத்தின்னி

நண்பகல் 12 மணி: தர்மினி – கடுழி நட்சத்திரம்

பிற்பகல் 2 மணி: நவமகன் – ஆதிதம்

பிற்பகல் 3 மணி: பிரசாந்தி சேகரம் –

வசந்தம் வராத காட்டில் பறவையின் ஓர் அழைப்பு

பிற்பகல் 4 மணி: லிவிங் ஸ்மைல் வித்யா – அந்தம்

பிற்பகல் 1 மணிக்கு மதிய உணவு இடைவேளை வழங்கப்படும். மாலை 5 மணிக்கு தேநீருடன் நிகழ்வு நிறைவடையும்.

அமர்வுகளை அரவிந்த் அப்பாத்துரை, சயந்தன், இளவாலை விஜயேந்திரன், அசுரா நாதன், தேவ அபிரா மற்றும் ஷோபாசக்தி ஆகியோர் நெறிப்படுத்துகின்றனர். ஒவ்வோர் அமர்விலும் வாசகர்கள் தமது கேள்விகளையும் கருத்துகளையும் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படவுள்ளது.

மேலதிகத் தொடர்புகளுக்கு: சயந்தன் – +41 79 519 24 29


ஆவே மரியா சுவிஸ் தமிழ்க்குழு அழைத்துச்செல்லும்
இத்தாலி நாட்டில் பாதுவா நகரில்
தூய அந்தோனியாரின் அழியாத நாக்கும்,
புனித உடலும் உள்ள திருத்தலத்திற்கும்
முன்று ரோஜா அன்னையின்
திருத்தலத்திற்கும்
புனித யாத்திரை
2026
AVE MARIA - SWISS TAMIL GROUP
காலம் : 24-10-2026 சனிக்கிழமை காலை புறப்பட்டு,
25-10-2026 ஞாயிற்றுக்கிழமை இரவு திரும்புவது
2 நாள் பயணம்
1 இரவு தங்குவது
3 நேர உணவு மற்றும்
திருப்பலிகளும் இடம்பெறும்.
புறப்படும் இடங்கள் : பேர்ன், கொலுத்தாண், பாசல், சூரிச், லூசேர்ன்
தொடர்புகளுக்கு : வின்சன் - 079 209 07 76
யேசு - 076 371 28 81


“அனைத்து
விடயங்களும்
மக்களுக்காகவே”
www.supeedsam.com
இங்கே
கிளிக்
செய்க

# சூரிச் Rosengartenstrasse: புதிய பாதசாரிக் கடவைகளுக்கு கண்டோன் அரசு அனுமதி மறுப்பு!




அதிக வாகனப் போக்குவரத்துள்ள Rosengartenstrasse வீதியில் இரண்டு புதிய பாதசாரிக் கடவைகளை அமைக்கும் சூரிச் நகரத்தின் திட்டத்திற்கு, கண்டோன் அரசு அனுமதி மறுத்துள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசல் மேலும் அதிகரிக்கலாம் என அரசு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கான செலவுகளை நகர நாடாளுமன்றம் கடந்த நவம்பரில் ஏற்கெனவே அங்கீகரித்திருந்தது. எனினும், அதிக போக்குவரத்து, சுமார் 8% சாய்வுள்ள வீதி, வாகனங்கள் கூடுதலாக நிற்க வேண்டிய நிலை மற்றும் வரிசையாகக் காத்திருப்பதற்கான இடப்பற்றாக்குறை ஆகியவை போக்குவரத்து ஓட்டத்தைப் பாதிக்கும் எனக் கண்டோன் அரசு கூறுகிறது. ஏற்கெனவே உள்ள, வாகனப் பாதையை நேரடியாகக் கடக்கத் தேவையில்லாத கடப்புப் பாதைகள் போதுமானதும் பாதுகாப்பானதுமான தீர்வு என்பது அதன் நிலைப்பாடாகும்.

இந்த முடிவு தங்களுக்கு வியப்பளிப்பதாகத் தெரிவித்துள்ள சூரிச் நகர நிர்வாகம், அதைப் பரிசீலித்து தேவைப்பட்டால் சட்டரீதியாக எதிர்க்கவுள்ளதாக அறிவித்துள்ளது. பாதசாரிகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் திட்டம் மறுக்கப்படுவது புரிந்துகொள்ள முடியாததாக இருப்பதாகவும் நகரம் தெரிவித்துள்ளது.

நகர நிர்வாகத்தின் தகவலின்படி, இந்த வீதியில் தினமும் சுமார் 55,000 கார்கள் பயணிக்கின்றன. வீதியை ஒட்டியுள்ள சுமார் 3,000 குடியிருப்பாளர்கள் அனுமதிக்கப்பட்ட இரைச்சல் வரம்பை மீறிய சூழலில் வாழ்கின்றனர்; இவர்களில் சுமார் 1,000 பேர் மிகக் கடுமையான இரைச்சலைக் குறிக்கும் எச்சரிக்கை வரம்பையும் மீறிய பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

Rosengartenstrasse மற்றும் Bucheggstrasse வீதிகளில் வேக வரம்பை மணிக்கு 50 கிலோமீற்றரிலிருந்து 30 கிலோமீற்றராகக் குறைக்கும் திட்டம் தொடர்பான சட்ட நடவடிக்கையும் இன்னும் நிலுவையில் உள்ளது. இந்த நடவடிக்கைகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி மதிப்பிட வேண்டும் எனக் கண்டோன் அரசு வலியுறுத்துகிறது.

SVP, FDP, Mitte கட்சிகள் கண்டோன் அரசின் முடிவை வரவேற்றுள்ளன. பசுமைக் கட்சியினர், நகரம் சட்டரீதியாக இந்த முடிவை எதிர்க்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்.




# சூரிச்சில் மருத்துவக் காப்பீட்டிற்கு 1,200 பிராங்குகள் வரை கூடுதல் உதவி:

## 2028 முதல் வழங்கத் திட்டம்

சூரிச்: சூரிச் நகரில் வசிக்கும் சுமார் 90,000 பேருக்கு, 2028ஆம் ஆண்டு முதல் மருத்துவக் காப்பீட்டுப் பிரீமியத்திற்காக 1,200 பிராங்குகள் வரை நகரின் கூடுதல் உதவி வழங்கும் திட்டத்திற்கான விதிமுறைகளை நகர நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

இதற்கான வருடாந்தச் செலவு சுமார் 60 மில்லியன் பிராங்குகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. நகரின் நிதிநிலை மோசமடைந்தால், உதவித் தொகையை 30 சதவீதம் வரை குறைக்க நகர நிர்வாகத்திற்கு அதிகாரம் வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. அதைவிட அதிகமான குறைப்புகளுக்கு நகர நாடாளுமன்றத்தின் பங்கேற்பு தேவைப்படும்.

2027ஆம் ஆண்டில் நகருக்கு 400 மில்லியன் பிராங்குகளுக்கும் அதிகமான பற்றாக்குறை எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தத் திட்டம் தொடர்ச்சியான நிதிச்சுமையை ஏற்படுத்தும் என FDP விமர்சித்துள்ளது. பிரீமிய உதவியை அதிகரிப்பதற்குப் பதிலாக மருத்துவச் செலவுகளைக் குறைக்க வேண்டும் என GLP வலியுறுத்தியுள்ளது.

திட்டத்தை வரவேற்றுள்ள பசுமைக் கட்சி, எந்தவொரு உதவிக் குறைப்பையும் நகர நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் எனக் கோரியுள்ளது. தொடர்ந்து உயர்ந்து வரும் பிரீமியங்களால் மக்களுக்கு விரைவான நிவாரணம் தேவை என்றும், நிதிநிலையைக் காரணமாகக் கொண்டு உதவியைக் குறைக்கக்கூடாது என்றும் SP தெரிவித்துள்ளது.

இந்த முன்மொழிவு அடுத்ததாக நகர நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.




# சூரிச்சில் 365 பிராங்குகள் வருடாந்தப் பயண அட்டை: 2028 வசந்தகாலத்தில் தொடங்க வாய்ப்பு

சூரிச் நகரில் பிரதான வசிப்பிடம் கொண்டவர்களுக்கு, Zone 110 வருடாந்தப் பயண அட்டையைப் பெரியவர்களுக்கு 365 பிராங்குகளிலும், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு 185 பிராங்குகளிலும் வழங்க நகர நிர்வாகம் முன்மொழிந்துள்ளது. புதிய அட்டைக்குப் பதிலாக, ஏற்கெனவே உள்ள வருடாந்த அட்டைகள் மற்றும் GA அட்டைகளுக்குத் தள்ளுபடிக் குறியீடு வழங்கப்படும். Stadt Zürich

இதற்காக ஆண்டுக்கு 195 மில்லியன் பிராங்குகள் செலவின அனுமதி கோரப்பட்டுள்ளது. நகர நாடாளுமன்றத்தின் முடிவும், மீண்டும் மக்கள் வாக்கெடுப்பும் தேவை. ஒப்புதல் கிடைத்தால், மிக விரைவாக 2028 வசந்தகாலத்தில் நடைமுறைக்கு வரலாம். Stadt Zürich

முந்தைய ஆண்டின் இறுதிக் கணக்கில் 100 மில்லியன் பிராங்குகளுக்கு மேல் பற்றாக்குறை ஏற்பட்டால், நகர மானியத்தை 50% வரை குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் செலுத்தும் கட்டணம் அதிகரிக்கலாம்; 365 பிராங்குகள் நிரந்தரமாக உறுதி செய்யப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.



## சிறப்புக் கட்டுரை

# ஒரு கோடி ரூபா நூல்களை அன்பளிப்புச் செய்த கல்லாறு சதீஷ்




**ஒரு கோரிக்கையில் தொடங்கி 25,000 நூல்களாக விரிந்த அறிவுப் பயணம்**

எழுத்திலிருந்து பதிப்புத்துறை வரை; கல்வியியலிலிருந்து திரைப்படம் வரை; இன்று ஒரு தலைமுறைக்கான நூல் முதலீடு

**கோட்டைக்கல்லாறு**

ஒரு சமூகத்தின் தேவையை எடுத்துரைக்கும் ஒரு சிறிய கோரிக்கைக் கடிதம் சில வேளைகளில் மிகப்பெரிய மாற்றத்தின் தொடக்கமாக மாறிவிடுகிறது.

"எமது நூலகத்திற்கு மேலும் நூல்கள் தேவை" என்ற கோட்டைக்கல்லாறு பொது நூலகத்தின் வேண்டுகோள் அவ்வாறானதொரு பயணத்தையே ஆரம்பித்தது.

அந்த வேண்டுகோள் பின்னர் ஏறாவூர் விவேகானந்தா பொது நூலகத்தின் தேவையுடன் இணைந்தது. தொடர்ந்து மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கும் பல பொது நூலகங்களின் தேவையும் அதனுடன் சேர்ந்தது.

இவ்வாறு ஒரு நூலகத்தின் கோரிக்கையாக ஆரம்பித்த முயற்சி, இன்று கிழக்கு இலங்கையின் பல பொது நூலகங்களைச் சென்றடைந்த சுமார் 23,000 நூல்களைக் கொண்ட பாரிய அறிவுத் திட்டமாக மாறியுள்ளது.

இதற்கு முன்னர் வழங்கப்பட்ட நூல்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், சுவிட்சர்லாந்தில் வாழும் எழுத்தாளர், பேச்சாளர், சமூகச் சேவகர் Dr. (h.c.) நாகேஸ்வரன் அருள்ராசா D.Litt. – கல்லாறு சதீஷால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நூல்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 25,000 ஆகிறது.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தற்போதைய நூல் தொகுதி மட்டும் சுமார் 4.8 தொன் நிறையுடையது.

இந்நூல்களின் அச்சு மதிப்பு, போக்குவரத்து, சரக்கு கையாளுதல், கிளியரிங், களஞ்சியப்படுத்தல் மற்றும் இலங்கைக்குள் விநியோகச் செலவுகள் ஆகியவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது, திட்டத்தின் மொத்த பெறுமதி சுமார் ஒரு கோடி இலங்கை ரூபாயை அணைகிறது.



ஆனால் இந்த முயற்சியின் பெறுமதியை பணத்தில் மட்டும் அளவிட முடியாது.

### கோட்டைக்கல்லாறில் தொடங்கிய கோரிக்கை

06.08.2023 திகதியிட்ட கோட்டைக்கல்லாறு பொது நூலகத்தின் கடிதத்தில், கல்லாறு சதீஷ் ஏற்கனவே வழங்கியிருந்த 540 அரிய நூல்கள் நூலகத்தின் சேகரிப்பை வளப்படுத்தியுள்ளதாகவும், வாசகர்களுக்கு பயனளிப்பதாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்களின் அதிகரித்து வரும் தேவைகளைக் கருத்திற்கொண்டு மேலும் சுமார் 7,000 நூல்களை வழங்குமாறும் கோரப்பட்டிருந்தது.

அந்தக் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் இன்று கோட்டைக்கல்லாறு பொது நூலகத்திற்கு 7,000 நூல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த முயற்சியை ஆரம்பகட்டத்தில் முன்னெடுத்தவர்களில் வாசகர் வட்டத் தலைவர் திரு. அருள்ராசா புருஷோத்தமன் மற்றும் நூலகப் பொறுப்பாளர் திருமதி வினோதா அன்றோ ஆகியோர் முக்கியமானவர்கள்.

இதன் மூலம் சமூகத்திற்குக் கிடைக்கும் பாடமும் தெளிவானது.

ஒரு தேவை இருக்கிறது என்று மட்டும் கூறுவது போதாது. அதை ஆவணப்படுத்த வேண்டும். எவ்வளவு உதவி தேவை என்பதைக் குறிப்பிட வேண்டும். பொறுப்புள்ள அமைப்பின் மூலம் கோர வேண்டும். அப்போதுதான் ஒரு தேவையை செயற்திட்டமாக மாற்ற முடியும்.

### ஏறாவூர் விவேகானந்தா பொது நூலகத்தின் வேண்டுகோள்

அடுத்த முக்கிய கோரிக்கை ஏறாவூர் நகரசபையின் கீழ் இயங்கும் விவேகானந்தா பொது நூலகத்திலிருந்து வந்தது.

அந்த வேண்டுகோள் வெறுமனே "நூல்கள் வேண்டும்" என்று அமைந்திருக்கவில்லை.

இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு, கலை, அரசியல், கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், சிறுவர் இலக்கியம், இளையோர் நூல்கள் மற்றும் ஆய்வுப் பதிப்புகள் உள்ளிட்ட பல துறைகளில் தரமான நூல்கள் தேவைப்படுவதாக விரிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலாக ஏறாவூர் விவேகானந்தா பொது நூலகத்திற்கு சுமார் 8,000 நூல்கள் ஒதுக்கப்பட்டன.

இந்த நூல் வேண்டுகோளை முன்னெடுத்த திருமதி நிலோஜினி மோகனதாஸ் மற்றும் திருமதி அச்சலா ராஜூ ஆகியோரின் பங்களிப்பும் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டியது.

பன்னிரண்டு நூலகங்களுக்கான உள்ளூராட்சி முயற்சி திட்டத்தை மேலும் விரிவாக்கியது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச

சபையின் அதிகாரபூர்வ வேண்டுகோள்.

11.03.2024 திகதியிட்ட அந்தக் கடிதத்தில், பிரதேச சபையின் கீழ் இயங்கும் நூலகங்களில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுவாசகர்களின் கல்வி மற்றும் அறிவு வளர்ச்சிக்குத் தேவையான பல்துறை நூல்களை வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.

ஒவ்வொரு நூலகத்தின் பெயர், பொறுப்பாளர், தொடர்பு விவரங்கள், கையொப்பங்கள் மற்றும் நூலக முத்திரைகள் உள்ளிட்ட தகவல்களும் இணைக்கப்பட்டிருந்தன.

இதுதான் இத்திட்டத்தின் நம்பகத்தன்மையை வலுப்படுத்திய அம்சங்களில் ஒன்று.
தேவை இருந்தது.
அது பதிவு செய்யப்பட்டது.
அதிகாரபூர்வமாக கோரப்பட்டது.
அதற்கு உதவி கிடைத்தது.
இறுதியில் நூல்கள் வாசகர்களைச் சென்றடைந்தன.

### 13 பொது நூலகங்களை சென்றடைந்த நூல்கள்

ஏறாவூர் விவேகானந்தா பொது நூலகத்திற்கு சுமார் 8,000 நூல்களும், கோட்டைக்கல்லாறு பொது நூலகத்திற்கு 7,000 நூல்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் குறுக்கல்மடம், செட்டிபாளையம், மாங்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி, பெரியகல்லாறு, துறைநீலாவணை, மகிளூர், குருமண்வெளி மற்றும் எருவில் ஆகிய பொது நூலகங்களுக்கும் தலா சுமார் 725 நூல்கள் வீதம் ஒதுக்கப்பட்டன.

மொத்தத்தில் சுமார் 23,000 நூல்கள் இந்த கட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

### துறைமுகத்திலிருந்து கிழக்குவரை – பலரின் மறைந்த உழைப்பு

இந்தப் பாரிய திட்டத்தின் வெற்றி அன்பளிப்பு நிகழ்வு நடைபெற்ற நாளில் மட்டும் உருவானதல்ல.

இந்தியாவிலிருந்து நூல்கள் கொழும்புத் துறைமுகத்தை அடைந்த பின்னர், அவற்றை வெளியே எடுத்து ஆவண நடவடிக்கைகளை மேற்கொண்டு கிழக்கு மாகாணத்திற்கு கொண்டுசெல்லும் பணியில் ஏறாவூர் நகரசபையின் பிரதித் தவிசாளர் திரு. கஜேந்திரன் ஞானசேகரன் முக்கிய பங்காற்றினார்.

கிழக்கு மாகாண ஆளுநரிடமிருந்து தேவையான கடிதங்களைப் பெற்றுக்கொள்வது, பல்வேறு நிர்வாக அலுவலகங்களுடன் தொடர்பு கொள்வது, துறைமுக நடவடிக்கைகள் முதல் கிழக்கிற்கான போக்குவரத்து வரை தொடர்ந்து ஒருங்கிணைப்பது போன்ற பணிகளில் அவர் பெரும் நேரத்தையும் உழைப்பையும் செலவிட்டார்.

இப்பணிக்காக தனிப்பட்ட சன்மானம் எதுவும் பெறாமல் அவர் வழங்கிய ஒத்துழைப்பு இந்தத் திட்டத்தின் முக்கிய பின்னணிப் பங்களிப்பாகும்.

அதேபோன்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் திரு. வினோராஜ் மேகசுந்தரம் உள்ளூராட்சி மட்டத்தில் தேவைகளை ஒருங்கிணைப்பதிலும் திட்டத்திற்கு ஆதரவான சூழலை உருவாக்குவதிலும் பங்களித்தார்.

இந்தியாவிலும் AMET பல்கலைக்கழக இணைவேந்தர் பேராசிரியர் Dr. திருவாசகர், பேராசிரியர் Dr. Jayaprakashvel, Discovery Book Palace நிறுவனர் திரு. வேடியப்பன் மற்றும் திரு. பொன் காசிராஜன் உள்ளிட்ட பலர் நூல் சேகரிப்பு, தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளில் துணைநின்றனர்.

### நூல்களுடன் தொடங்கிய நீண்ட பயணம்

இந்த 25,000 நூல் அன்பளிப்பை கல்லாறு சதீஷின் தனிப்பட்ட ஒரு சமூகத் திட்டமாக மட்டும் பார்க்க முடியாது.

அவரது வாழ்க்கையில் நூலும் இலக்கியமும் பல தசாப்தங்களாக தொடரும் ஒரு பாதையாக இருந்து வருகின்றன.

1999ஆம் ஆண்டிலிருந்து சுவிட்சர்லாந்தில் தமிழ் நூல்களை இறக்குமதி செய்து விற்பனை செய்வதோடு, நூல்களை எழுதி வெளியிடுதல், பிற எழுத்தாளர்களின் நூல்களை பதிப்பித்தல்,



அவற்றை வாசகர்களிடம் கொண்டு சேர்த்தல் ஆகிய பணிகளிலும் அவர் ஈடுபட்டு வந்துள்ளார்.

அவரது ஆரம்பகால படைப்புகளில் குறிப்பிடத்தக்கது “பனிப்பாறைகளும் சுடுகின்றன” என்ற நூல்.

இந்தப் படைப்பிற்காக இந்தியாவில் வழங்கப்பட்ட லில்லி தேவசிகாமணி நினைவுப் பரிசை பெற்றதுடன், சுவிட்சர்லாந்திலும் ஊக்குவிப்பு அங்கீகாரம் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து 2004ஆம் ஆண்டு அவரது “சொர்க்கங்களும் தண்டிக்கின்றன” என்ற நூல் வெளியானது. இந்த நூலுக்கும் சுவிட்சர்லாந்தில் ஊக்குவிப்பு அங்கீகாரம் கிடைத்தது.

சுவிட்சர்லாந்துக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே சிறுகதை நூல் வெளியீட்டின் ஆரம்பகாலப் பதிவுகளில் கல்லாறு சதீஷின் பெயரும் இடம்பெறுகிறது.

அவரது சில சிறுகதைகள் ஜெர்மன் மொழியிலும் வெளியிடப்பட்டதுடன், சுவிஸ் வாசகர்களுடனான இலக்கியச் சந்திப்புகளும் நடைபெற்றன.

சுவிட்சர்லாந்தில் தமிழர்களின் குடியேற்ற வாழ்க்கை இருபது ஆண்டுகளை கடந்த காலகட்டத்தில், புலம்பெயர் தமிழர்களின் சாதனைகள் மற்றும் சமூகப் பங்களிப்புகளை மீள்பார்க்கும் நிகழ்வுகளிலும் அவரது இலக்கியப் பணி பதிவு பெற்றது.

## பல்கலைக்கழகச் சூழலில் பதிவான பெயர்

கல்லாறு சதீஷின் பெயர் இலக்கிய உலகத்தைத் தாண்டி கல்வியியல் ஆய்வுகளிலும் இடம்பெற்றுள்ளது.

லூசர்ன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் Martin Baumann, Brigitte Luchesi மற்றும் Annette Wilke ஆகியோரின் தொகுப்பில் வெளிவந்த

“Tempel und Tamilen in zweiter Heimat – Hindus aus Sri Lanka im deutschsprachigen und skandinavischen Raum”

என்ற ஜெர்மன் மொழியிலான கல்வியியல் ஆய்வுநூலிலும் அவரது பங்களிப்பு இடம்பெற்றுள்ளது.

ஜெர்மன் மொழிப் பகுதிகளிலும் ஸ்காண்டிநேவிய நாடுகளிலும் வாழும் இலங்கை இந்து மற்றும் தமிழ் சமூகங்களின் மத, கலாசார, சமூக வாழ்க்கையை ஆய்வு செய்யும் இந்த நூலில் அவரது பெயர் இடம்பெற்றிருப்பது, சுவிஸ் தமிழ் சமூகத்துடனான அவரது நீண்டகால ஈடுபாட்டின் மற்றொரு பதிவாகும்.

## இலக்கியத்திலிருந்து திரைப்படம் வரை

கல்லாறு சதீஷின் பங்களிப்பு நூல்கள் மற்றும் இலக்கியத்துக்குள் மட்டும் நின்றுவிடவில்லை.

சுவிட்சர்லாந்தில் தயாரிக்கப்பட்ட “Madly in Love” திரைப்படத்துடனும் அவருக்கும் அவரது மனைவி உஷா ரஜினி அருள்ராசா அவர்களுக்கும் குறிப்பிடத்தக்க தொடர்பு இருந்தது.

Topic Film AG Zürich தயாரிப்பில், Anna Luif இயக்கத்தில் உருவான இந்த திரைப்படம் சுவிட்சர்லாந்தில் வளர்ந்த தமிழ் இளைஞர்களின் காதல், குடும்பம், திருமணம் மற்றும் இரு கலாசாரங்களுக்கிடையிலான வாழ்க்கை முரண்பாடுகளை மையமாகக் கொண்டது.



இந்த திரைப்படத்தை உருவாக்குவதற்கான கள ஆய்வில், இயக்குநர் குழுவுக்கும் சுவிஸ் தமிழ் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை உருவாக்குவதில் அருள்ராசா நாகேஸ்வரன் முக்கிய பங்காற்றினார்.

திரைப்பட இயக்குநர் Anna Luif பின்னர் வழங்கிய நேர்காணலிலும், சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழ் எழுத்தாளர் Arulrasa Nageswaran மற்றும் மொழிபெயர்ப்பாளர் Pirapakaran Thangarajah ஆகியோரின் மூலம் தமிழ் சமூகத்துடன் தொடர்பு ஏற்படுத்த முடிந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தொடர்பின் மூலம் பல்வேறு வயதினரும் சமூகப் பின்னணிகளும் கொண்ட தமிழர்களுடன் பேட்டிகள் நடத்தவும், தமிழ் விழாக்கள், குடும்ப நிகழ்வுகள் மற்றும் கலாசார வாழ்க்கையை நெருக்கமாக அறிந்துகொள்ளவும் திரைப்படக் குழுவிற்கு வாய்ப்பு கிடைத்தது.

இதனால் அருள்ராசா நாகேஸ்வரனின் பணி ஒரு சாதாரண திரைப்பட ஆலோசனையாக மட்டும் இல்லாமல், சுவிஸ் திரைப்பட உலகிற்கும் தமிழ் சமூகத்திற்கும் இடையிலான கலாசாரப் பாலமாக அமைந்தது.

அவரது மனைவி உஷா ரஜினி அருள்ராசாவும் இந்தப் பணிகளில் இணைந்து ஆலோசனைகளை வழங்கினார்.

திரைப்படத்தின் திரைக்கதை உருவாக்கம் சார்ந்த ஆலோசனைகள், கலாசார பின்னணி, தமிழ் சமூகத் தொடர்புகள், பாடல் தொடர்பான படைப்புப் பணி மற்றும் இந்தியாவில் இருந்து இசை சார்ந்த படைப்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான ஒருங்கிணைப்புகள் ஆகியவற்றிலும் கல்லாறு சதீஷ் பங்காற்றியுள்ளார்.

திரையரங்கில் வெளியான திரைப்படத்தின் இறுதி credits பகுதியில் Arulrasa Nageswaran மற்றும் Usha Rajani Arulrasa ஆகிய இருவரின் பெயர்களும் இடம்பெற்றிருப்பதும் அவர்களின் திரைப்படப் பங்களிப்பின் நேரடி பதிவாகும்.

பல தளங்களில் பயணித்த ஒரு படைப்பாளர்

இதனால் கல்லாறு சதீஷின் பயணத்தை ஒரு எழுத்தாளரின் வாழ்க்கையாக மட்டும் வரையறுக்க முடியாது.

அவர் நூல் எழுதியுள்ளார்.
நூல்களை வெளியிட்டுள்ளார்.
பிறரின் படைப்புகளைப் பதிப்பித்துள்ளார்.

நூல்களை இறக்குமதி செய்து வாசகர்களிடம் கொண்டு சென்றுள்ளார்.
கல்வியியல் ஆய்வுகளில் பங்களித்துள்ளார்.

திரைப்படத் தயாரிப்பில் கலாசார ஆலோசகராகவும் படைப்பாற்றல் பங்களிப்பாளராகவும் செயல்பட்டுள்ளார்.

பேச்சாளராகவும் சமூகச் சேவகராகவும் செயல்பட்டுள்ளார்.

தற்போது சுவிட்சர்லாந்தில் Aadaa Finance GmbH நிறுவனத்தின் உரிமையாளராகவும் இயக்குநராகவும் தொழில்துறையில் செயல்பட்டு வருவதோடு, இலக்கிய மற்றும் சமூகப் பணிகளையும் தொடர்கிறார்.

## ஒரு கோடி ரூபா – ஆனால் பெறுமதி அதைவிடப் பெரிது

சுமார் 23,000 நூல்களின் அச்சு மதிப்பு இந்திய ரூபாயில் 25 இலட்சத்திற்கும் அதிகமாக மதிப்பிடப்படுகிறது.

அதனை இலங்கை ரூபாய்க்கு மாற்றி, போக்குவரத்து மற்றும் விநியோகச் செலவுகளையும் இணைத்தால் திட்டத்தின் மொத்தப் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபாயை அணைகிறது.

ஆனால் ஒரு நூலின் உண்மையான பெறுமதி அதன் பின்பக்க அட்டையில் அச்சிடப்பட்ட விலையில் இல்லை.

ஒரு குழந்தை அந்த நூலை வாசிக்கும்போது அதன் பெறுமதி மாறுகிறது.

ஒரு மாணவன் அதிலிருந்து ஒரு கேள்வியை எழுப்பும்போது அதன் பெறுமதி மேலும் பெருகுகிறது.

ஒரு இளைஞன் அந்தக் கேள்வியிலிருந்து ஒரு புதிய சிந்தனையை உருவாக்கும்போது அந்த நூல் சமூக முதலீடாக மாறுகிறது.

கல்லாறு சதீஷ் இதனை இவ்வாறு பார்க்கிறார்:

“நான் வழங்கியுள்ள இந்த 25,000 நூல்கள் வெறும் புத்தகங்களின் எண்ணிக்கை அல்ல. ஒவ்வொரு நூலும் ஓர் அறிவுக் களஞ்சியம். இவற்றைப் படிக்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் சமூகத்தையும் நாட்டையும், ஏன் உலகத்தையே வழிநடத்தக்கூடிய தலைவர்களாக உருவாக வேண்டும் என்பதே என் கனவு.”

## கைப்பேசியும் நூலும்

இன்றைய தலைமுறையின் வாழ்க்கையில் கைப்பேசி தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

மொழி, அறிவியல், தொழில்நுட்பம், உலகச் செய்திகள் என்று எண்ணற்ற தகவல்களை சில விநாடிகளில் கைப்பேசி வழங்குகிறது.

அதனால் தொழில்நுட்பத்தை எதிரியாகப் பார்க்க முடியாது.

ஆனால் ஒரு தகவலை சில விநாடிகளில் பார்த்துவிடுவதற்கும், ஒரு நூலை அமைதியாக வாசித்து அதன் கருத்துடன் நீண்ட நேரம் பயணிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

அச்சு நூல் வாசிப்பு கவனம், கற்பனை, பகுத்தறிவு, கேள்வி எழுப்புதல் மற்றும் ஆழ்ந்த சிந்தனை ஆகியவற்றை வளர்க்கிறது.

அதனால்தான் கல்லாறு சதீஷின் இந்த நூல் அன்பளிப்பின் நோக்கம் நூலக அலமாரிகளை நிரப்புவது மட்டுமல்ல.

அலமாரிகளை நிரப்புவதற்கல்ல – ஒரு தலைமுறையை உருவாக்குவதற்காக இந்த 25,000 நூல்கள் வாசிக்கப்பட வேண்டும்.

குழந்தைகளின் கைகளுக்குச் செல்ல வேண்டும்.

மாணவர்கள் அவற்றைத் தேட வேண்டும்.

ஆசிரியர்கள் அவற்றை அறிமுகப்படுத்த வேண்டும்.

ஆய்வாளர்கள் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

இளைஞர்கள் அவற்றிலிருந்து கேள்விகளை எழுப்ப வேண்டும்.

அந்தக் கேள்விகளிலிருந்து புதிய சிந்தனைகள் பிறக்க வேண்டும்.

அந்தச் சிந்தனைகளிலிருந்து புதிய தலைவர்கள் உருவாக வேண்டும்.

அதுவே இந்த முயற்சியின் நீண்டகால இலக்கு.

## வாசிப்பிலிருந்து சிந்தனையாளர்களை உருவாக்குவது;

சிந்தனையாளர்களிலிருந்து தலைவர்களை உருவாக்குவது.

25,000 நூல்கள் இந்தியாவில் இருந்து புறப்பட்டு கொழும்புத் துறைமுகத்தை அடைந்து, அங்கிருந்து கிழக்கு மாகாணத்திற்குச் சென்று நூலக அலமாரிகளில் இடம்பிடித்திருக்கலாம்.

ஆனால் அவற்றின் பயணம் அங்கே முடிவதில்லை.

ஒரு வாசகர் அந்த நூல்களில் ஒன்றைத் திறக்கும் அந்த நொடியில் தான் அவற்றின் உண்மையான பயணம் ஆரம்பமாகிறது.

## கல்லாறு சதீஷின் வார்த்தைகளில்,

“பாடசாலைகள் மாணவர்களுக்கு கல்வியைக் கொடுக்கின்றன; நூலகங்கள் அவர்களுக்குச் சிந்திக்கக் கற்றுக்கொடுக்கின்றன. கல்வி அவர்களை அதிகாரிகளாக உருவாக்கலாம்; ஆழமான வாசிப்பு அவர்களைத் தலைவர்களாக உருவாக்கலாம்.”




# இந்தியாவில் சுவிஸ் ஜனாதிபதி பார்மெலின்: வர்த்தகம், முதலீடு மற்றும் கல்வி ஒத்துழைப்பில் கவனம்

சுவிட்சர்லாந்தின் ஜனாதிபதி கய் பார்மெலின், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா சென்றுள்ளார். புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த அவர், இருநாட்டு வர்த்தகம், முதலீடு, அறிவியல் மற்றும் கல்வி ஒத்துழைப்புக் குறித்து கலந்துரையாடினார்.

இந்தியா-EFTA வர்த்தக மற்றும் பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஓராண்டு நிறைவடையும் நிலையில் இந்தப் பயணம் இடம்பெறுகிறது. பார்மெலினுடன் சுவிஸ் வர்த்தக மற்றும் அறிவியல் பிரதிநிதிகளும் சென்றுள்ளனர். ஒக்டோபர் 7 அன்று நடைபெறும் இந்தியா-EFTA உச்சிமாநாட்டில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் ஆராயப்படவுள்ளன.

இன்றைய சந்திப்பின் முடிவுகளாக, குடியேற்றம் மற்றும் மக்கள் இடம்பெயர்வு தொடர்பான ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், இளம் தொழில் நிபுணர்களின் பரிமாற்றத்துக்கான ஒப்பந்தமும் இந்திய அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் இடம்பெற்றுள்ளன.

இவை தொழில்திறன் மற்றும் மொழித்திறன் மேம்பாடு உள்ளிட்ட பரிமாற்றங்களை நோக்கமாகக் கொண்டுள்ளன.

மேலும் முதலீடுகளை ஊக்குவிக்க, முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை விரைவாக நிறைவு செய்ய சுவிட்சர்லாந்து விரும்புவதாகப் பார்மெலின் தெரிவித்தார் என Keystone-SDA செய்தி கூறுகிறது. அறிவுசார் சொத்துரிமை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றமும் முக்கியமானதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரங்கள்: சுவிஸ் கூட்டாட்சி அரசின் பயண அறிவிப்பு, இந்திய அரசின் PIB அறிவிப்பு; முதலீட்டுப் பாதுகாப்பு குறித்த கருத்துக்கு Keystone-SDA செய்தி.

# முன்னாள் எதிரிகள் நம்பிக்கையை உருவாக்கும் போது:

## ஜே.வி.பி - பா.ஜ.க சந்திப்பு தமிழர்களுக்கும் இலங்கைக்கும் கூறும் செய்தி



ராஜ் சிவநாதன் - மெல்பேர்ன், அவுஸ்திரேலியா

ஜே.வி.பி மற்றும் இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதா கட்சி இடையில் நடைபெற்ற சமீபத்திய சந்திப்பு, "பரஸ்பர நம்பிக்கை" என்ற அடிப்படையில் பார்க்கப்பட வேண்டிய ஒரு சாதாரண அரசியல் புகைப்படம் அல்ல. அது தெற்காசிய அரசியல் நிலைமை எவ்வளவு வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதை காட்டும் முக்கியமான அறி குறியாகும்.

பல தசாப்தங்களாக, ஜே.வி.பி தனது அரசியல் அடையாளத்தின் ஒரு பகுதியை இந்தியா மீதான சந்தேகம் மற்றும் எதிர்ப்பின் அடிப்படையில் கட்டியெழுப்பியது. மறுபுறம், பா.ஜ.க என்பது இன்றைய இந்திய அரசின் அதிகாரம், தேசிய நலன் மற்றும் பிராந்திய மூலோபாயத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாகும். இந்த இரண்டு கட்சிகளுக்கும் வேறுபட்ட வரலாறு, சித்தாந்தம் மற்றும் அரசியல் பண்பாடு உள்ளது. இருந்தாலும், இன்று அவை அகதிகள், மீனவர்கள், புலம்பெயர் மக்கள் மற்றும் இந்திய வம்சாவளி தமிழர்கள் போன்ற விடயங்களைப் பற்றி ஒன்றாக அமர்ந்து பேசுகின்றன.

இந்த நிகழ்வு நமக்கு ஒரு முக்கியமான உண்மையைச் சொல்கிறது: அரசியலில் நிரந்தர எதிரிகள் கூட, தேசிய நலன் தேவைப்படும்போது நடைமுறை



கூட்டாளிகளாக மாற முடியும். ஜே.வி.பி இன்று என்.பி.பி அரசாங்கத்தின் மூலம் இலங்கையை வழிநடத்துகிறது. பழைய கோஷங்களால் மட்டும் ஒரு நாட்டை ஆள முடியாது என்பதை அது இப்போது உணர்கிறது. இலங்கையின் பொருளாதாரம், கடன் மறுசீரமைப்பு, முதலீடு, எரிசக்தி பாதுகாப்பு, துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் பிராந்திய நிலைத்தன்மை ஆகிய அனைத்துக்கும் இந்தியாவின் நம்பிக்கை அவசியமாகியுள்ளது. எனவே, ஒருகாலத்தில் இந்தியாவை எதிர்த்த அரசியல் இயக்கமே இன்று புதுடில்லியுடன் செயற்பாட்டு உறவை கட்டியெழுப்ப வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

இந்தியாவுக்கும் அதற்கான காரணங்கள் உள்ளன. கொழும்பில் உள்ள அரசாங்கத்தை இந்தியா புறக்கணிக்க முடியாது. தனது மூலோபாய நலன்களை பாதுகாக்கவும், சீனாவின் அதிகப்படியான செல்வாக்கைத் தடுக்கவும், பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தமிழ்நாட்டை பாதிக்கும் மீனவர் பிரச்சினை, அகதிகள் பிரச்சினை, கச்சத்தீவு, கடல் பாதுகாப்பு மற்றும் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் போன்ற விடயங்களை கவனிக்கவும் இந்தியா கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் பா.ஜ.கவும் ஜே.வி.பி/என்.பி.பி தலைமையுடன் நேரடியாக தொடர்பு கொள்வதில் மதிப்பைக் காண்கிறது.

ஆனால் தமிழர்களுக்கு இந்த வளர்ச்சி மிக கவனமாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

பல ஆண்டுகளாக அரசியல் தூரத்தில் இருந்த ஜே.வி.பி மற்றும் பா.ஜ.க பரஸ்பர நம்பிக்கையை உருவாக்க முடிந்தால், தமிழ் அரசியல் கட்சிகள் தங்களுக்குள் அடிப்படை ஒற்றுமையைக் கூட உருவாக்க முடியாததற்கு என்ன காரணம்? தமிழ் சிவில் சமூகங்கள், தொழில்முறை அமைப்புகள், புலம்பெயர் அமைப்புகள் மற்றும் அரசியல் தலைவர்கள் ஏன் இன்னும் பிளவுபட்டே இருக்க வேண்டும்? அதே நேரத்தில் தமிழ் மக்கள் நிலப் பிரச்சினை, இராணுவமயமாக்கல், பொருளாதார புறக்கணிப்பு, வேலையின்மை, மீனவர்களின் துயரம், மாகாண சபைத் தேர்தல்களின் தாமதம் மற்றும் 13ஆவது திருத்தத்தின் முழுமையான அமலாக்கமின்மை போன்ற பிரச்சினைகளை



தொடர்ந்து சந்தித்து வருகின்றனர்.

இந்த சந்திப்பு தமிழர்களுக்கு ஒரு எச்சரிக்கை மணி ஆகும்.

இந்தியா தனது தேசிய நலனின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்துடன் பேசும். இலங்கை அரசாங்கம் கொழும்பின் நலனின் அடிப்படையில் இந்தியாவுடன் பேசும். தமிழர்கள் ஒன்றுபட்ட, நடைமுறை சார்ந்த, எதிர்கால நோக்கமுள்ள திட்டத்தை முன்வைக்காவிட்டால், தமிழ் பிரச்சினைகள் இரண்டாம் நிலை விடயங்களாக மட்டுமே பேசப்படும் அபாயம் உள்ளது. அவை தலைப்புச் செய்திகளில் தோன்றலாம்; ஆனால் அவை அரசாங்க நடவடிக்கைகளாக மாறாமல் போகலாம்.

எனவே தமிழ் தலைமைகள் உணர்ச்சி வசப்பட்ட உரைகள் மற்றும் உள்கட்சி போட்டிகளைத் தாண்டி முன்னேற வேண்டும். நமக்கு தேவைப்படுவது ஒரு தெளிவான அரசியல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்:

1. தற்போதைய அரசியலமைப்பின் கீழ் உடனடி மாகாண சபைத் தேர்தல்கள்.
2. குறைந்தபட்ச அரசியலமைப்பு தொடக்கமாக 13ஆவது திருத்தத்தின் முழுமையான அமலாக்கம்.
3. தனியார் நிலங்களை விடுவித்தல் மற்றும் தேவையற்ற இராணுவமயமாக்கலை முடிவுக்குக் கொண்டுவருதல்.
4. இந்திய இழுவைப் படகுகளால் பாதிக்கப்படும் வடக்கு மீனவர்களுக்கு நியாயமான மற்றும் நடைமுறை தீர்வு.
5. திரும்பி வரும் அகதிகளுக்கு பாதுகாப்பும் ஆதரவும்.
6. காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி/யாழ்ப்பாண விமான நிலைய அபிவிருத்தி.
7. வடக்கு மற்றும் கிழக்கிற்கான புலம்பெயர் முதலீட்டு அமைப்புகள்.
8. இளைஞர் வேலைவாய்ப்பு, ஏற்றுமதி அபிவிருத்தி, சுற்றுலா, விவசாயம் மற்றும் மீன்பிடித் துறையின் நவீனமயமாக்கல்.
9. ஒன்றுபட்ட தமிழ் மேடையின் மூலம் இந்தியா, இலங்கை மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் நேரடி தொடர்பு.

இந்த ஜே.வி.பி - பா.ஜ.க தொடர்பு நமக்கு கற்றுக்கொடுக்கும் பாடம் மிகவும் எளிமையானது. அரசியல் என்பது




சித்தாந்தம் மட்டுமல்ல. அது காலநேரம், வாய்ப்பு, அழுத்தம் செலுத்தும் திறன் மற்றும் அமைப்புத் திறன் ஆகியவற்றின் கூட்டுத்தொகை. ஜே.வி.பி யதார்த்தத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ள வேண்டியதை புரிந்துகொண்டுள்ளது. இந்தியா அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டியதை புரிந்துகொண்டுள்ளது. தமிழர்களும் பிளவு எங்கள் பேரம் பேசும் சக்தியை மட்டுமே பலவீனப்படுத்தும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

பல ஆண்டுகளாக தமிழ் அரசியல் கடந்தகால நினைவுகளுக்கும் தற்போதைய பிளவுகளுக்கும் இடையில் சிக்கியுள்ளது. ஆனால் எங்கள் மக்களுக்கு தேவைப்படுவது ஒரு எதிர்காலம். அவர்களுக்கு வேலைவாய்ப்பு, முதலீடு, கண்ணியம், பாதுகாப்பு, கல்வி, நில உரிமை, உட்கட்டமைப்பு மற்றும் ஜனநாயக நிறுவனங்களின் மூலம் அரசியல் அதிகாரம் தேவை.

முன்னாள் எதிரிகள் தங்கள் தேசிய நலனுக்காக பரஸ்பர நம்பிக்கையை உருவாக்க முடிந்தால், தமிழ் கட்சிகளும் தமிழ் சிவில் சமூகங்களும் எங்கள் மக்களின் வாழ்வாதாரம், பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக பரஸ்பர நம்பிக்கையை உருவாக்க வேண்டும்.

தமிழர்கள் நடைமுறை அரசியல் தீர்வுக்கும்பொருளாதாரமறுகட்டுமானத்திற்கும் தயாராக உள்ளனர் என்பதை இந்தியாவுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும், உலகத்துக்கும் தெரிவிக்க வேண்டிய சரியான நேரம் இதுவாகும். ஆனால் அந்த செய்தி வலிமையாக ஒலிக்க வேண்டுமெனில், நாம் ஒரே குரலில் பேச வேண்டும்.

ஜே.வி.பி - பா.ஜ.க சந்திப்பு ஒரு சாதாரண அரசியல் மரியாதை நிகழ்வாகத் தோன்றலாம். உண்மையில், அது பிராந்திய அரசியல் நிலம் மாறிக்கொண்டிருப்பதை காட்டுகிறது. தமிழர்கள் பக்கவாட்டில் நின்று பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. எங்கள் எதிர்காலம் குறித்து எங்களைத் தவிர்த்து முடிவுகள் எடுக்கப்படுவதற்கு முன், நாம் ஒழுங்குபடுத்தி, ஒன்றிணைந்து, செயல்பட வேண்டும்.






# பிரான்சில் மாணவர் போராட்டம் தீவிரம்!

# அரசின் சிக்கனத் திட்டத்தால் மாணவர் அதிருப்தி !!

பிரான்சில் மீண்டும் பாரிய மாணவர் போராட்டங்கள் வெடித்துள்ளன. மாணவர் அதிருப்தியானது அரசின் சிக்கனத் திட்டத்தால் நாட்டை உலுக்கும் புதிய சமூகப் போராட்டமாக மாறியுள்ளது. பிரான்சில் கடந்த சில வாரங்களாக உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் போராட்டங்கள், பொதுத்துறை ஊழியர்களின் வேலைநிறுத்தங்கள், தொழிற்சங்க எதிர்ப்புகள் என சமூக அதிருப்தி வேகமாக விரிவடைந்து வருகிறது.

முதலில் கல்வித்துறையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, நெரிசலான வகுப்பறைகள் மற்றும் மோசமான கட்டிட வசதிகள் தொடர்பான மாணவர் போராட்டமாகத் தொடங்கிய இயக்கம், தற்போது அரசின் 2027ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிரான பரந்த அரசியல் மற்றும் சமூக எதிர்ப்பாக மாறியுள்ளது.

**பள்ளிக்கூடங்களே போராட்டத்தின் தொடக்கம்**

இந்தப் போராட்டத்தின் ஆரம்பக் காரணம் கல்வித்துறையில் மாணவர்கள் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகளாகும். செப்டெம்பர்



21ஆம் தேதி பாரிஸ் புறநகரான Créteil பகுதியில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்ததற்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அது பாரிஸ் பிராந்தியத்தில் உள்ள பல பள்ளிகளுக்கும், அதன் பின்னர் நாடு முழுவதும் உள்ள பள்ளிகளுக்கும் பரவியது.

மாணவர் அமைப்புகள் முன்வைக்கும் முக்கிய கோரிக்கைகளில் ஆசிரியர்கள் மற்றும் கல்வி ஊழியர்களின் பற்றாக்குறையை சரிசெய்தல், வகுப்பறைகளில் மாணவர் எண்ணிக்கையைக் குறைத்தல், பழுதடைந்த பள்ளிக் கட்டிடங்களைச் சீரமைத்தல், கல்விச் சூழலை மேம்படுத்துதல் மற்றும் மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைத்தல் ஆகியவை அடங்குகின்றன.

பல மாணவர்கள், ஆசிரியர் ஒருவர் இல்லாதபோது வகுப்புகள் இணைக்கப்படுவதும், ஏற்கனவே அதிகமான மாணவர்கள் கொண்ட வகுப்பறைகள் மேலும் நெரிசலடைவதும் தங்களது கல்வியை பாதிப்பதாகக் கூறுகின்றனர். தேசிய பல்கலைக்கழக சேர்க்கை நடைமுறையான (Parcoursup) ஏற்படுத்தும் அழுத்தமும் மாணவர் அமைப்புகளால் சுட்டிக்காட்டப்படுகிறது.

**போராட்டத்தை தூண்டிய சமூக ஊடகங்கள்:**

இந்தப் போராட்டம் பாரம்பரிய தொழிற்சங்க அமைப்புகள் வழியாக மட்டும் பரவவில்லை. பல சமூக ஊடகங்கள் மூலமாக பள்ளி வாரியாக போராட்ட அழைப்புகள் பரவியுள்ளன. இதனால் ஒரு பள்ளியில் எழுந்த பிரச்சினை மிகக் குறுகிய காலத்தில் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றது. செப்டெம்பர் இறுதிக்குள் சுமார் 180 பள்ளிகள் போராட்ட நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அக்டோபர் 2ஆம் தேதிக்குள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிகளில் மாணவர் நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும், 222 பள்ளிகள் முற்றுகையிடப் பட்டதாகவும் பிரெஞ்சு ஊடகங்கள் தெரிவித்தன.




இதனால் மாணவர் இயக்கம் ஒரே மையத்திலிருந்து முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும் இயக்கமா அல்லது பல்வேறு உள்ளூர் அதிருப்திகளின் தன்னிச்சையான கூட்டுத்தொகையா என்ற விவாதமும் உருவாகியுள்ளது.

கல்விப் பிரச்சினையிலிருந்து தேசிய பட்ஜெட் பிரச்சினைக்கு இந்த விவகாரம் மாறியுள்ளது.

மாணவர்களின் கல்விக் கோரிக்கைகளுடன் சேர்ந்து மற்றொரு பெரிய பிரச்சினை போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளது. அது பிரான்ஸ் அரசின் 2027ஆம் ஆண்டுக்கான சிக்கனமான வரவு-செலவுத் திட்டமாகும். பிரான்ஸ் அரசாங்கம் அதிகரித்து வரும் அரசுக் கடன் மற்றும் பட்ஜெட் பற்றாக்குறையை கட்டுப்படுத்துவதற்காக பல செலவுக் குறைப்பு நடவடிக்கைகளை முன்வைத்துள்ளது.

2027ஆம் ஆண்டில் சுமார் €54 பில்லியன் அளவுக்கு சேமிப்பை உருவாக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதில் பொதுத்துறை ஊதியங்களை முடக்குவது, ஓய்வூதிய செலவுகளை கட்டுப்படுத்துவது, உள்ளாட்சி மற்றும் சுகாதாரச் செலவுகளில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

அரசின் வாதம் பொருளாதார நிதிநிலையைச் சீரமைப்பதே அவசியம் என்பதாகும். ஆனால் தொழிற்சங்கங்களின் பார்வையில், ஏற்கனவே வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள சூழலில் ஊதியங்களை முடக்குவது பொதுத்துறை




ஊழியர்களின் வாங்கும் திறனை மேலும் பாதிக்கக்கூடும்.

### பொதுத்துறை ஊழியர் தெருவில்

இதேவேளை செப்டெம்பர் 29ஆம் தேதி ஆசிரியர்கள், தீயணைப்பு வீரர்கள், சுகாதாரப் பணியாளர்கள், அரசு ஊழியர்கள் உள்ளிட்ட பல பொதுத்துறை ஊழியர்கள் நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரான்ஸ் உள்துறை அமைச்சகத்தின் கணக்குப்படி, அன்றைய போராட்டங்களில் நாடு முழுவதும் சுமார் 206,000 பேர் கலந்து கொண்டனர்; தொழிற்சங்கமான CGT இதைவிட அதிகமான எண்ணிக்கையை தெரிவித்தது. அரசு ஊழியர்களின் ஊதிய உயர்வு இல்லாமை மற்றும் வாங்கும் திறன் குறைதல் ஆகியவை முக்கிய எதிர்ப்புக் காரணங்களாக இருந்தன.

இதன் மூலம் மாணவர்களின் கல்விப் பிரச்சினையும் தொழிலாளர்களின் ஊதியப் பிரச்சினையும் தனித்தனி போராட்டங்களாக இல்லாமல், பொதுச் சேவைகளுக்கு போதுமான நிதி ஒதுக்கப்படுகிறதா? அரசின் சிக்கன நடவடிக்கைகளின் சுமையை யார் ஏற்க வேண்டும்? என்ற பரந்த கேள்விகளுடன் இணைந்துள்ளன.

ஆனால் இந்த மாணவர் போராட்டங்கள் வன்முறையாக மாறின. ஆரம்பத்தில் பெரும்பாலான போராட்டங்கள் பள்ளி முற்றுகைகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களாக இருந்தன. ஆனால் சில நகரங்களில் குப்பைத்தொட்டிகளுக்கு தீ வைப்பது, பட்டாசுகள் மற்றும் பிற பொருட்களை காவல்துறையினர் மீது வீசுவது, பள்ளிக் கட்டிடங்களுக்கு சேதம் விளைவிப்பது போன்ற வன்முறை சம்பவங்களும் இடம்பெற்றன. Nantes, Strasbourg, Marseille, Rennes உள்ளிட்ட நகரங்களிலும் பதற்றமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அக்டோபர் 1ஆம் தேதியன்று மட்டும் 1,949 பேர் கைது செய்யப்பட்டதாக பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து அரசு அவசரக் கூட்டங்களை நடத்தியதுடன், கலவரக் கட்டுப்பாட்டு காவல்துறையினரையும் அதிக அளவில் களமிறக்கியது. இங்கு ஒரு முக்கியமான வேறுபாட்டை கவனிக்க வேண்டும். மாணவர்களின் கல்விக் கோரிக்கைகள் ஒன்று. போராட்டத்தின் போது நிகழ்ந்த வன்முறை மற்றும் சொத்துச் சேதம் மற்றொன்று. பிரெஞ்சு அரசும் போராட்ட அமைப்புகளும் இந்த இரண்டையும் எவ்வாறு அணுக வேண்டும் என்பதில் கடுமையாக மோதுகின்றன.




## காவல்துறை நடவடிக்கையும் புதிய சர்ச்சையும்

போராட்டங்களை கட்டுப்படுத்த காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளும் விவாதத்திற்குள்ளாகியுள்ளன. குறிப்பாக சிறார்களான மாணவர்களுக்கு எதிராக காவல்துறை பயன்படுத்திய சில ஆயுதங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் கோரப்பட்டுள்ளன.

சமூக ஊடகங்களில் பரவும் காணொளிகள் இந்த விவாதத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. அரசாங்கம் தனது நிலைப்பாட்டில், அமைதியான போராட்ட உரிமையை மதிப்பதாகவும், ஆனால் வன்முறை மற்றும் பொதுச் சொத்து சேதத்தை அனுமதிக்க முடியாது என்றும் கூறுகிறது.

இந்தப் போராட்டம் தற்போது பிரான்சின் அரசியல் சூழலுடனும் இணைந்துள்ளது. 2027ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பொருளாதாரம், அரசு செலவுகள், பொதுச் சேவைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு ஆகியவை முக்கிய அரசியல் விவாதங்களாக உள்ளன.

அரசாங்கம் சில அரசியல் சக்திகள் மாணவர் போராட்டத்தை அரசியல் ரீதியாக பயன்படுத்துவதாக குற்றம்சாட்டியுள்ளது. குறிப்பாக இடதுசாரி கட்சியான (La France Insoumise) மீது அரசுத் தரப்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தக் குற்றச்சாட்டை அக்கட்சி மறுத்து, அரசாங்கத்தின் நடவடிக்கைகளே பதற்றத்தை அதிகரித்ததாகக் கூறியுள்ளது. பிரெஞ்சு புலனாய்வு மதிப்பீடுகள் தொடர்பான இந்த விவகாரத்திலும் வெவ்வேறு விளக்கங்கள் வெளியாகியுள்ளன.

எனவே, தற்போதைய போராட்டத்தை முழுமையாக ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் இயக்கமாக வரையறுப்பது சர்ச்சைக்குரியது. ஆரம்ப இயக்கம் பல பள்ளிகளில் உள்ளூர் பிரச்சினைகளிலிருந்து தன்னிச்சையாக உருவானதாகவும், பின்னர் பல்வேறு அரசியல் மற்றும் தொழிற்சங்க சக்திகள் அதனுடன் இணைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அரசு என்ன செய்ய முயல்கிறது?

போராட்டத்தை தணிக்க பிரெஞ்சு அரசு சில நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. குறிப்பாக உதவித்தொகை பெறாத மாணவர்களிடம் (BTS) மற்றும் தயாரிப்பு வகுப்புகளுக்கான கட்டணம் வசூலிக்கும் திட்டத்தை அரசு




பின்வாங்கியது. ஆனால் மாணவர் அமைப்புகள் இதை மட்டும் போதுமானதாக கருதவில்லை.

அக்டோபர் 2ஆம் தேதி கல்வி அமைச்சர் Édouard Geffray மாணவர் மற்றும் மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்தார். ஆனால் உடனடி மற்றும் உறுதியான நடவடிக்கைகள் அறிவிக்கப்படாததால் போராட்டத்தைத் தொடரப்போவதாக மாணவர் அமைப்புகள் தெரிவித்துள்ளன. கல்வித் தொழிற்சங்கங்களும் அக்டோபர் 6ஆம் தேதி வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

இன்றைய பிரான்ஸ் போராட்டத்தை வெறும் மாணவர் கலகம் என்று மட்டும் பார்ப்பது அதன் ஆழமான காரணங்களை மறைத்துவிடும். அதே நேரத்தில் அனைத்து வன்முறைச் சம்பவங்களையும் மாணவர்களின் கல்விக் கோரிக்கைகளுடன் ஒன்றாகக் கருதுவதும் சரியான புரிதலை வழங்காது.

## பிரான்சின் முன்னுள்ள பெரிய கேள்வி

ஒருபுறம் அரசின் நிதிநிலை, அதிகரிக்கும் கடன் மற்றும் பட்ஜெட் பற்றாக்குறை ஆகியவற்றை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. மறுபுறம் கல்வி, சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் ஊதியங்கள் குறித்த மக்களின் எதிர்பார்ப்புகளும் உள்ளன. இந்த இரண்டுக்கும் இடையில் அரசாங்கம் சமநிலையை எவ்வாறு உருவாக்குகிறது என்பதே தற்போதைய நெருக்கடியின் மையக் கேள்வியாக இருக்கிறது.

பிரான்சின் தற்போதைய நிலைமை, ஒரு பள்ளியில் ஆசிரியர் இல்லாத பிரச்சினை எவ்வாறு தேசிய அளவிலான சமூகக் கேள்வியாக மாற முடியும் என்பதற்கான ஓர் எடுத்துக்காட்டு. மாணவர்களின் கல்வித் தரம், பொதுத்துறை ஊழியர்களின் வாங்கும் திறன், அரசின் சிக்கன நடவடிக்கைகள், காவல்துறையின் அணுகுமுறை மற்றும் 2027 தேர்தலை முன்னிட்டு உருவாகும் அரசியல் பதற்றம் ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன.

இதனால், பிரான்சில் தற்போது நடைபெறும் போராட்டம் ஒரு தனிப்பட்ட கல்விப் பிரச்சினையைத் தாண்டி, அரசின் நிதிச்சுமையை குறைப்பதா, பொதுச் சேவைகளை பாதுகாப்பதா, அல்லது இரண்டுக்கும் இடையில் புதிய சமநிலையை உருவாக்குவதா என்ற மிகப் பெரிய தேசிய விவாதமாக உருவெடுத்துள்ளது. வரும் நாட்களில் அரசு-மாணவர்-தொழிற்சங்க பேச்சுவார்த்தைகள் எந்த திசையில் செல்கின்றன என்பதே இந்தப் போராட்டம் தணியுமா அல்லது மேலும் பரவுமா என்பதை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக இருக்கும்.


STEDO
சுவிஸ் தமிழ் பொருளாதார மேம்பாட்டு அமைப்பு
தொழில்முனைவோரின் சங்கமம்
தடம்
வணிகத் துறையில் புதிய தடம் பதிக்கும் நமது
தமிழ் தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் சாதனையாளர்களை
ஒன்றிணைக்கும் ஒரு பிரம்மாண்டமான மாலைப் பொழுது!
தொழில் தொடர்பு
தொழில் அதிபர்களுடன் சந்திப்பு
புதிய தொழில் வாய்ப்புகள்
முன்னேற்றம்
புதிய யோசனைகள்
புதிய வாய்ப்புகள்
உடை
அழகான வணிக உடை
அழகான பாரம்பரிய உடை
இரவு உணவு
சிறப்பு உணவு
இனிய சந்திப்பு
Date
13.12.2026
(Sunday)
Time
14:30-18:00
18:00-21:00 Networking
Venue
STERNENSAAL
BÜMPLIZSTRASSE 119
3018 BERN
079 218 70 75 | 079 780 10 00 | 079 443 44 94
www.stedo.ch



# ஆட்டம் கண்ட ராஜபக்சாக்களின் அரசியல் எதிர்காலம்

*கடந்த வாரத் தொடர்ச்சி...*



சின்னத்தம்பி குருபரன்

பொதுசனப் பேரமுனவின் வேட்பாளராக இறுதிக் கட்டத்தில் கொத்தாபய ராஜபக்சாவினை மகிந்த முன்மொழிந்தார். இதற்குக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதிலும் குமார வெல்கம “கோத்தாபய இராணுவத்தில் அதிகாரியாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மாத்திரம் பணியாற்றினாரே தவிர அரசியல் அனுபவம் இல்லாதவர். அவர் இந்தத் தேர்தலில் வெற்றியடைந்து பதவிக்கு வந்தால் நாட்டின் அரசியல்இ பொருளாதாரம் மோசமான நிலையைச் சென்றடையும்” என அவர் கூறிய தீர்க்க தரிசனம் கோத்தாபய ஜனாதிபதித் தேர்தலில் 67 இலட்சம் வாக்குகள் பெற்று ஜனாதிபதியாகிய கர்வம் அவரைத் தரைகால் புரியாமல் ஆடவைத்தது. பதவியேற்று ஆறு மாத காலத்துக்குள் அவரின் சுயரூபம் வெளிப்பட்டது.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் ராஜபக்சாக்களும் அவரது சகாக்களும் செய்த ஊழல்கள்இ மோசடிகள்இ சொத்துக் குவிப்புக்கள்இ கைமாறல்கள்இ இலஞ்சங்கள்இ தரகுகள் எதுவுமே கண்டு கொள்ளப்படவுமில்லை. அவற்றுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. சரிஇ அது அவர்களின் ஆட்சிக் காலமென வைத்துக் கொள்வோம்இ மைத்திரிஇ ரனில் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்திலும் விசாரணை செய்யப்பட்டுத் தண்டனை வழறக்கப்படவில்லையே. இவர்களின் ஆட்சிக் காலத்தில் மத்திய வங்கியில் மேற்கொள்ளப்பட்ட பிணைமுறி ஊழல் மொசடி பாரிய ஒன்றாகக் கருதப்பட்டது. இந்த ஊழலுக்காவது கோத்தாபயவின் ஆட்சிக் காலத்தில் எந்த விசாரணையும் செய்யப்படவில்லை. மத்திய வங்கி ஆளுனர் அர்ச்சுனா மகேந்திரன்மீது முழுப் பழியையும் சுமத்திஇ அவரைத் தப்பிக்கச் செய்துஇ தலைமறைவாக இருக்கச் சொல்லி இவர்கள் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். வருகின்ற அரசாங்கங்கள் ஆளுக்காள் பாதுகாப்புக் கொடுத்து ஊழல்இ மோசடிகளை மூடி மறைத்துக் கொண்டிருக்கின்றனர். இவைகள் தொடர்பாக முற்று முழுதான சுதந்திரமான விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட்டால் சங்கிலித் தொடர்போல் தாமும் பல தலைவர்களும்



சிக்குவோம் எனத் தெரிந்து கை சுத்தமில்லாத எல்லோரும் மூடி மறைத்துக் கொண்டு தப்பிப் பிழைத்திருக்கின்றனர்.

'அரசியலில் இதுவல்லாம் சகசமப்பா' என்பது போல் அப்பழுக்கு இல்லதவர்களாக அறிக்கைகளும் தமது வீரதீர சாகசங்களைச் சொல்லி பாராளுமன்றத்திலும் மெடைகளிலும் முழங்கிக் கொண்டிருக்கின்றனர். இவை யாவும் மக்களுக்கும் தெரியும். காலம் வரும்வரைக் காத்திருந்து கோத்தாபயஇ மகிந்தவுக்கு எதிரான போராட்டங்களை நடத்தி எச்சரிக்கை விடுத்து வெற்றியும் கண்டனர். ஆட்சியாளர்களால் 2015 இல் இருந்து இன்றுவரை ஏற்படுத்திய அரசியல்இ பொருளாதார நெருக்கடிஇ அதனால் ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பாக மக்கள் கொதித்துப் போய் இருக்கின்றனர்.

நல்லாட்சிக் காலத்தில் ஆட்சியாளர்கள் இருவரும் மல்லுக்கட்டிக் கொண்டு சீர்கெட்ட ஆட்சி நடத்தியமைக்காக 2020 பொதுத் தேர்தலில் மைத்திரிக்கும் ரனிலுக்கும் மக்கள் தகுந்த பாடம் கற்பித்தனர். இவர்களுக்குப் பாடம் கற்பித்து அவர்கள் ஏற்படுத்திய தெரிவும் உருவாக்கிய அரசாங்கமும் நாட்டை அதல பாதாளத்துக்குள் தள்ளிவிட்டது. இவர்கள் செய்த தவறுகளில் இருந்து மீழெழ முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். அதன் சுமைகள் யாவற்றையும் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜனநாயக நாடெனக் கூறித் தம்பட்டமடிக்கும் ஒரு நாட்டில் குமார வெல்கம கூறியதுபோல் இராணுவ அதிகாரி ஒருவரை ஜனாதிபதி ஆக்கினால் என்ன நடக்கும் என்பதை கோத்தாபயவின் இரண்டரை வருட கால ஆட்சியில் நிரூபித்துக் காட்டியிருந்தார். ஒருபக்கம் இராசபக்சாக்களும் சகாக்களும் நாட்டைச் சூறையாடி அரச கஜானாவைக் காலி செய்தனர். மறுபக்கம் கோத்தாபய இஸ்டப்படி ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார். இதுவே அவ்வாட்சி 30 மாதங்களில் தோல்வியடைவதற்குக் காரணமாக அமைந்தன.

மகிந்தவின் ஆட்சிக் காலத்திலும் கோத்தாபயவின் காலத்திலும் ராஜபக்சாக்கள் மாலைதீவுஇ உகண்டாஇ சிங்கப்பூர்இ மலேசியாஇ இந்தோனேசியாஇ அவுஸ்திரேலியாஇ சுவிட்சலாந்துஇ பிரித்தானியாஇ இத்தாலிஇ இரசியாஇ பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சொத்துக்களைக் குவித்தனர். உள்நாட்டிலும் அரச சொத்துக்களையும் மக்களின் சொத்துக்களையும் வழைத்துப் போட்டனர். அங்கு சென்று களியாட்டங்களில் ஈடுபட்டு சமூக வலைத்தளங்களில் பதிவேற்றினர். அவை எல்லாம் மக்களின் மனங்களில் கடுப்பேற்றிஇ வெறுப்பை ஏற்படுத்தின.

மக்கள் 2019 ஜனாதிபதித் தேர்தலிலும் 2020 பொதுத் தேர்தலிலும் மக்கள் வழங்கிய மக்கள் வழங்கிய ஆணையைக் காலில் போட்டு மிதித்தனர். தகைக்னம் ஏறி தலைகால் புரியாமல் ஆடினர். அவை யாவும் மக்கள் மனங்களில் வெறுப்பை ஏற்படுத்தின.

கொறொனா சிகிச்சைக்கான வைத்திய உபகரணங்கள்இ மருந்துப் பொருள் கொள்வனவுஇ தடுப்பூசிக் கொள்வனவுஇ வைத்தியசாலைஇ தடுப்பு முகாம்கள் பராமரிப்பு ஆகியவற்றிலெல்லாம் ஊழல் தலைவிரித்தாடின. சகல இறக்குமதிகளிலும் உள்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களிலும் ஒவ்வொரு அரசியல்வாதியும் பங்கும் தரகும் பெற்றுக் கொண்டிருந்தனர்.

கோத்தாபய திடீரெனத் தீர்மானமெடுத்து இரசாயன வளமாக்கிகள்இ கிருமிஇ களைநாசினிகள் ஆகியவற்றுக்கான இறக்குமதித் தடையை விதித்து விவசாயிகளின் வயிற்றிலடித்து மக்களைப் பட்டினி போட்டார். 600 க்கும் மேற்பட்ட பொருட்களுக்கு இறக்குமதித் தடை விதித்தார். அரச கஜானா காலியானதனால் அரசியல்இ பொருளாதார நெருக்கடி உச்சத்தை அடைந்து அந்நியச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டது. டொலர் பற்றாக்குறை அதனால் டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி என்றுமெப்போதும் இல்லாதவாறு குறைந்து டொலரின் பெறுமதி இலங்கை ரூபாவில் 350 யும் தாண்டியது. அதனால் உள்நாட்டில் பொருட்களின் விலை உச்சத்தைத் தொட்டு பணவீக்கம் 80 வீதத்தையும் தாண்டியது. எரிபொருள்இ எரிவாயுஇ பல மணிநேர மின் துண்டிப்புஇ பால்மாஇ சீனிஇ பருப்புஇ மருந்துப் பொருட்கள் ஆகிய அத்தியாவசியப் பொட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு வரிசைகள் பல்கிப் பெருகின. பொருட்களுக்காகப் பல நாட்கள் மக்கள் வரிசைகளில் காத்திருந்தனர். வரிசைகளில் நின்றவரகள் பலர் உயிரிழந்தனர். மக்கள் தெருவுக்கு இறங்கி அரசுக்கெதிராகப் போராட ஆரம்பித்தனர்.

மக்கள் அரசுக்கெதிராக 2022 பெப்ரவரி நடுப்பகுதியில் இருந்து போராட்டங்களையும் பேரணிகளையும் நடாத்த ஆரம்பித்தனர். போராட்டம் மார்ச்சு மாதத்தில் இருந்து உக்கிரமடைய ஆரம்பித்தது. காலிமுகத் திடலில் கொட்டில்களும் கூடாரங்களும் அமைத்து ஜனாதிபதி கோத்தாபயவுக்கு எதிராக “கோத்தா கோ கம” என்ற கோசத்துடனும் அலரி மாளிகைக்கு முன்பாக மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக “மைனா கோ கம” என்ற கோசத்துடனும் போராட்டம் 100 நாட்களைத் தாண்டியது. நாடு பூராகவும் இனஇ மதஇ மொழிஇ கட்சி பேதமின்றிஇ மழைஇ வெயில்இ பட்டிணி என்று பாராது மக்கள் போராட்டங்களில் ஈடுபட ஆரம்பித்தனர். காலப் போக்கில் சகல பாராளுமன்ற உறுப்பினர்கள்இ அமைச்சர்கள் உட்படச் சகலரையும் பதவி விலகுமாறு கோசமிட ஆரம்பித்தனர். சகல போராட்டக்காரர்களும் நாட்டின் ஆட்சியின் முறைமை மாற்றத்தை (ளலளவநஅ ஊhயபெந) வேண்டி நின்றன. நாட்டைக் கொளளையடித்தவர்களும் இலஞ்சம்இ ஊழல்இ மோசடி செய்தவர்களையும்இ நாட்டின் அரசியல்இ பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களையும் வீட்டுக்குச் செல்லுமாறு கோரினர். இதனால் பல அமைச்சர்கள்இ மத்திய வங்கி ஆளுனர் உட்படப் பலரும் பதவி விலகினர்.

போராட்டம் உச்சக் கட்டத்தில் நடந்து கொண்டிருக்கும் போது 2022 மே 9 அன்று அப்போதைய பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ச தலைமையில் அலரி மாளிகையில் பொதுஜனப் பேரமுனவின் முக்கிய உறுப்பினர்கள்இ அமைச்சர்கள்இ தனது கட்சிப் பாராளுமன்ற உறுபபினர்களை அழைத்துக் கூட்டம் ஒன்றினை நடத்தினார். இதில் கட்சியின் முக்கிய குண்டர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். கூட்டத்தின் அரகலய தொடர்பாகப் பல விடயங்கள் ஆலேசிக்கப்பட்டுஇ சங்கை ஊதிவிட்டுஇ நிறைவில் மகிந்த பிரதமர் பதவிவியை இராஜினாமாச் செய்ததும் திட்டமிட்டபடி மது போதையில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்இ கட்சி அங்கத்தவர்கள்இ குண்டர்கள் எல்லோருமாக அலரி மாளிகைஇ காலிமுகத் திடல் ஆகிய இடங்களில் இருந்து சாத்வீகமாகப் போராடிய போராட்டக்காரர்களைத் தாக்க ஆரம்பித்தனர். இதனை அறிந்த பொது மக்கள் திரண்டுவந்து குண்டர்களைத் தாக்க ஆரம்பித்தனர். கலவரம் நாடு பூராகவும் பரவின. பல அரசியல்வாதிகளின் வீடுகள்இ வாகனங்கள்இ சொத்துக்கள் தீககிரையாகின. இதன்போது பொலனறுவை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டனர். நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஜனாதிபதிஇ பிரதமர் உட்படப் பல அரசியல்வாதிகளும் ஓடித் தலைமறைவாகினர். மூன்றாம் நாள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்த அசாதாரண நிலை தோன்றுவதற்கு மகிந்த ராஜபக்சவே காரணமாக இருந்தார் எனப் பலரும் கூறினர். இதற்குக் காரணமான எவரும் ரனில் விக்கிரமசிங்காவின் ஆட்சியில் தண்டிக்கப்படாது அப்பாவிப் போராட்டக் காரர்கள் தண்டிக்கப்பட்டனர்.

அரசுக்கு எதிரான போராட்டம் மேலும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. நாட்டின் பெரும்பாலான இடங்களில் உணவுத் தவிர்ப்புச் சத்தியாக்கிரகப் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. கோத்தாபயவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து வெளியேற்றி



முறைமை மாற்ற அடிப்படையிலான அரசை உருவாக்குவதற்கான போராட்டம் தொடர்ந்தன. அமைச்சர்களும் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தனர். போராட்டத்தின் உச்சக்கட்டமாக யூலை 9 ஆந் திகதி காலை 9.30 மணியளவில் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தைக் கைப்பற்றினர். பின்னர் அலரி மாளிளைஇ ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றையும் கைப்பற்றி மாலை வேளையில் ரனில் விக்கிரமசிங்காவின் வீட்டுக்கும் தீ வைத்தனர். ஜனாதிபதி மாளிகைக்குள் இருந்து ஜனாதிபதி கோத்தாபய பாதுகாப்புடன் பின் கதவால் வெளியேறினார். பாதுகாப்பாக தலைமறைவாகி இருந்த கொத்தாபய 17-07.2022 அன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து மாலைதீவுக்குச் சென்று அங்சிருந்து சிங்கப்பூருக்குச் சென்றார். பதில் ஜனாதிபதியாக ரனில் விக்கிரமசிங்க பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். சிங்கப்பூரில் இருந்தவாறே தனது இராஜினாமாக் கடிதத்தைச் சபாநாயகருக்கு அனுப்பி வைத்தார். அரசியல் யாப்பின்படி பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் 134 வாக்குகளைப் பெற்று நாட்டின் ஜனாதிபதியாக மிகுதிக் காலத்துக்கு ரனில் விக்கிமசிங்கா தெரிவு செய்யப்பட்டார்.

2020 பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி படுதோல்வி அடைந்ததோடு கட்சியில் இருந்து ஒருவர்கூடப் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகவில்லை. ஒருவருடத்தின் பின்னர் தேசியப் பட்டியல் மூலம் ஜோன் அமரதுங்காவின் இடத்தைப் பறித்துப் பாராளுமன்றத்துக்குச் சென்ற ரனில் விக்கிரமசிங்காவுக்கு அரகலய போராட்டத்தின் மூலம் பிரதம மந்திரிப் பதவியும் பின்னர் ஜனாதிபதிப் பதவியுயும் கிடைத்தது. ஜனாதிபதிப் பதவிக்கு ஆசைப்பட்டுக் கொண்டு இருந்தவருக்கு 'பழம் நழுவிப் பாலில் விழுந்து அது நழுவி வாயில் விழுந்ததுபோல்' ஜனாதிபதிப் பதவி கிடைத்ததும் அவரின் சுயரூபம் வெளிபட்டது. அறகலயப் போராட்டம் நடைபெறாது இருந்திருந்தால் ரனில் விக்கிரமசிங்கா இறக்கும்வரை ஜனாதிபதிப் பதவிக்கு கனவு மாத்திரமே கண்டிருக்க முடியும். பதவிக்கு வந்ததும் ராஜபக்சாக்களுக்கும் தனக்கு வாக்களித்தவர்களுக்கும் விசுவாசமாக இருந்து கொண்டு பதவியைப் பயன்படுத்தி இராணுவம்இ பொலிசைக் கொண்டு போராட்டக்காரர்கள் கைப்பற்றிய இடங்களில் இருந்து அவர்களை வெளியேற்றிப் பலரைக் கைது செய்து சிறையில் தள்ளினார். அதற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்திப் பலரைக் கைது செய்து சிறைகளில் அடைத்தார். தனக்கு ஆதரவளித்தஇ நாட்டைச் சூறையாடிய ஊழல்இ மொசடிப் பேர்வழிகளை இன்றும் பாதுகாத்துக் கொண்டு மேலும் ஊழல்இ மோசடிகள் செய்பவர்களையும் சட்டத்தில் இருந்து பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இப்பொது நாட்டில் ரனில்-ராஜபக்சா ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

ரனில்-ராஜபக்சா ஆட்சியில் நாட்டுக்கும் சிறுபான்மையினருக்கும் விரோதமான பல சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளன. பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு ஜனநாயகத்துக்கு விரோதமான



பல காரியங்களை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செய்து கொண்டு மக்களைச் சுமை தாங்கிகளாக ஆக்கிக் கொண்டிருக்கின்றனர். எத்தனை காலம்தான் மக்களை ஏமாற்றப் போகின்றார்களோ தெரியவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்டு நாட்டின் அதியுயர் பதவியான ஜனாதிபதியாகப் பதவி வித்துஇ நாட்டை ஆட்சி செய்த மகிந்த ராஜபக்சஇ மைத்திரிபால சிறிசேன இருவரும் தாம் பதவியில் இருந்து நீங்கிய பின்னர் ஜே. ஆர்இ சந்திரிக்கா போல் கௌரவமாக அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்திருக்க வேண்டும். அதை விடுத்துப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டுப் பாராளுமன்றத்துக்குள் நுழைந்திருக்கக் கூடாது. ஆசை யாரைத்தான் விட்டது.

நல்லாட்சிக் காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மந்திரி சபையைக் கலைத்துப் பிரதமராக மகிந்தவை நியமித்தார். நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் ரனில் மீண்டும் பிரதமராகப் பதவியேற்றார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதமொன்றில் “எனது சகோதரர் மகிந்த 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்க வேண்டும். இப்போது பாராளுமன்னத்துக்கு வந்து இரண்டாந் தடவையாகவும் அவமானப்பட்டுவிட்டார். இனிமேலாவது அவர் அரசியலில் இருந்து ஒதுங்குவது சிறந்தது. பதவி ஆசையில் மீண்டும் 2020 பொதுத் தேர்தலில் போட்டியிட்டுப் பிரதமராகப் பதவியேற்றுஇ மீண்டும் தலைகால் புரியாது ஆட்டம்போட்டுக் கோத்தவும் மகிந்தவும் நாட்டை அரசியல்இ பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளினர். அதனால் மக்கள் அரகலய போராட்டம் நடத்தி இருவரையும் பதவியில் இருந்து விலகச் செய்து ஓடி ஒழிக்கச் செய்தனர். இது அவருக்கு மூன்றாவது அவமானமாகும். அவரின் கட்சி ஆட்சியில் இருந்தும் அவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சகாக்களுக்கும் அமைச்சுப் பதவியில் இல்லாதிருப்பது நான்காவது அவமானமாகும். அவரினாலும் கட்சியினாலும் ஒழுங்கு செய்யப்படும் கூட்டங்களுக்கு அவர் நம்பியிருந்த மக்கள் தாமாகவே முன்வந்து பெருமளவு பங்குபற்றாமை அவரின் 52 வருட அரசியல் அனுபவத்துகும் சாணக்கியத்துக்கும் கிடைத்த பலத்த அடியாகும்.

ராஜபக்சாக்களின் அரசியல் எதிர்காலம் ஆட்டம் கண்டுவிட்டன. மகிந்த ராஜபக்சவின் அரசியல் அனுபவமும் சாணக்கியமும் மக்கள் முன்னால் செல்லாக் காசாகிக் கொண்டிருக்கின்றன. முன்புபொல் நடமாட முடியாத வகையில் அவரின் உடலும் உள்ளமும் பலவீனமடைந்து விட்டது. அவர் இனிமேலாவது அரசியலில் இருப்பதைவிடுத்துக் கௌரவமாக ஒதுங்கி இருப்பதே மெல். அதேபோல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் இரண்டு முறை பாராளுமன்றத்துக்குச் சென்றவர்களும் புதியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வழிவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்குவது நாட்டுக்கு மேலும் சிறப்பைத் தரும். இது தொடர்பான புதிய சட்டங்களைப் பாராளுமன்றத்தில் அங்கீகரித்து நடைமுறைப்படுத்த வெண்டும். எதிர்காலத்தில் போலிகளும் ஊழல்இ மேசடிப் பேர்வழிகளும்இ குண்டர்களும் சட்டத்தினால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளும்இ கொலைகாரர்களும் தேர்தல்களில் போட்டியிட்டுத் தெரிவாகாத வகையில் மக்கள் விழப்புடன் வாக்களித்துப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். இதுவே சீரழிந்த அரசியல் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்குச் சிறந்த உபாயமாகவும் அமையும்.



# Switzerland குற்றவாளிகளான வெளிநாட்டவர்களை வெளியேற்றும்

## விதிகளை இறுக்கக் கோரிக்கை; நீதித்துறையினர் கவலை




வன்முறைக் குற்றங்களில் தண்டிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள், தமது பூர்வீக நாட்டுடன் தொடர்பில்லை அல்லது தொடர்பு குறைவாக உள்ளது என்பதைக் காரணமாகக் கொண்டு, நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவதிலிருந்து விலக்கு பெறுவதைத் தடுக்க வேண்டும் என SVP தேசிய அவை உறுப்பினர் ஜோன்-லூக் அடோர் (Jean-Luc Addor) கோரியுள்ளார்.

இதற்காக, கடுமையான தனிப்பட்ட பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு வெளியேற்றத்தைத் தவிர்க்க அனுமதிக்கும் 'Härtefallklausel' விதிவிலக்கைக் கட்டுப்படுத்தும் முன்மொழிவு ஆலோசனைக்கு விடப்பட்டுள்ளது.

SVP, FDP மற்றும் Mitte கட்சிகள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. 2024ஆம் ஆண்டில் 802 வழக்குகளில் வெளியேற்றம் மேற்கொள்ளப்படவில்லை என FDP சுட்டிக்காட்டியுள்ளது. மறுபுறம், ஓராண்டுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை பெற்றவர்களில் ஏறத்தாழ 77 சதவீதமானோருக்கு ஏற்கெனவே வெளியேற்றம் விதிக்கப்படுவதாகக் கூறி, SP மற்றும் பசுமைக் கட்சி சட்ட மாற்றம் தேவையற்றது எனத் தெரிவித்துள்ளன.

நீதிபதிகள் சங்கம், நீதிமன்றங்களின் மதிப்பீட்டு அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. முன்மொழிவு அரசியலமைப்பு மற்றும் சர்வதேசச் சட்டத்துடன் பொருந்துமா என்ற கவலையும் எழுப்பப்பட்டுள்ளது. ஜனநாயக சட்டத்தரணிகள் அமைப்பு, இது அடிப்படை உரிமைகளையும் மனித உரிமைகளையும் பாதிக்கக்கூடும் என விமர்சித்துள்ளது.

குறிப்பாக, Switzerlandஇல் பிறந்து வளர்ந்த வெளிநாட்டுக் குடியுரிமையாளர்களுக்கு, தொடர்புகள் குறைவான நாட்டிற்கு வெளியேற்றப்படுவது மிகக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என சமூக அமைப்புகள் எச்சரிக்கின்றன.

இது இன்னும் நடைமுறைக்கு வந்த புதிய சட்டம் அல்ல. 2010ஆம் ஆண்டின் வெளியேற்ற முயற்சி மற்றும் 2016ஆம் ஆண்டின் அமலாக்க முயற்சியைச் சுற்றிய பழைய அரசியல் விவாதத்தை இந்த முன்மொழிவு மீண்டும் எழுப்பியுள்ளது.

# நீர்மட்டம் குறைவு:

# சூரிச் ஏரிப் படகுகளுக்கு முன்கூட்டியே குளிர்கால அட்டவணை



சூரிச் ஏரியின் நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருவதால், படகுச் சேவைகள் அக்டோபர் 1 முதல் குறைக்கப்பட்ட குளிர்கால அட்டவணைக்கு மாற்றப்பட்டுள்ளன. வழக்கமாக இது அக்டோபர் 19 முதலே நடைமுறைக்கு வரும்.

பெரிய ஏரிச் சுற்றுலாப் பயணங்கள் குறுகிய வழித்தடத்தில் தினமும் இருமுறை மட்டுமே நடைபெறும். சிறிய ஏரிச் சுற்றுலாவும், Thalwil-Küsnacht Goldbach இடையிலான சேவையும் தொடரும்.

நான்கு பெரிய படகுகள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டு, பாதுகாப்புக் கருதி Bürkliplatz பகுதியில் நிறுத்தப்படுகின்றன. தற்போது 107 பயணங்களில் 40 மட்டுமே இயக்கப்படுகின்றன. லிம்மாட் ஆற்றுப் படகுகள் உள்ளிட்ட சில சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

# உலகப் புதுமைத் தரவரிசையில் தொடர்ந்து
# 16 ஆவது ஆண்டாக சுவிட்சர்லாந்து முதலிடம்!




சுவிட்சர்லாந்து, ஒக்டோபர் 5: ஐக்கிய நாடுகள் சபையின் உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு (WIPO) வெளியிட்ட 2026 உலகப் புதுமைக் குறியீட்டில், சுவிட்சர்லாந்து மீண்டும் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதன்மூலம் தொடர்ந்து 16ஆவது ஆண்டாக உலகின் முன்னணி புதுமைப் பொருளாதாரமாகத் தனது இடத்தைத் தக்கவைத்துள்ளது.

செப்டம்பர் 29ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்தத் தரவரிசையில், 139 நாடுகள் மற்றும் பொருளாதாரங்கள் மதிப்பிடப்பட்டுள்ளன. சுவிட்சர்லாந்தைத் தொடர்ந்து சுவீடன், அமெரிக்கா, தென்கொரியா, சிங்கப்பூர் ஆகியவை முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.

ஆராய்ச்சி, கல்வி, உட்கட்டமைப்பு, தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் படைப்பாற்றல் உள்ளிட்ட 79 குறிகாட்டிகளின் அடிப்படையில் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுமைக்கான வளங்கள் மற்றும் முதலீடுகளில் சுவிட்சர்லாந்து இரண்டாம் இடத்தையும், அறிவு, தொழில்நுட்பம் மற்றும் படைப்பாற்றல் சார்ந்த புதுமை விளைவுகளில் முதலிடத்தையும் பெற்றுள்ளது.

இந்த ஆண்டின் அறிக்கை, அறிவியல் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை வணிக முயற்சிகளாக மாற்றும் புதிய நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளது. செயற்கை நுண்ணறிவு, ரோபோ தொழில்நுட்பம், உயிரியல் அறிவியல் மற்றும் குவாண்டம் கணினி உள்ளிட்ட துறைகள் இதில் கவனம் பெற்றுள்ளன

# நான்கரை ஆண்டுகளாக ஜெனீவாவில் நிற்கும் ரஷ்ய விமானம்:

## மாதம் 30,000 பிராங்குகள் நிறுத்தக் கட்டணம்

ரஷ்ய விமான நிறுவனமான Aeroflot பயன்படுத்திய Airbus A321 விமானம், 2022 பெப்ரவரி 27 முதல் ஜெனீவா விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பைத் தொடர்ந்து விதிக்கப்பட்ட வான்வெளிக் கட்டுப்பாடுகளால், அதன் மொஸ்கோ திரும்பும் பயணம் தடைப்பட்டது.

விமானத்தை நிறுத்தி வைத்திருப்பதற்கான கட்டணம் மாதத்திற்கு சுமார் 30,000 சுவிஸ் பிராங்குகள் என விமான நிலைய இயக்குநர் Jean-François de Saussure தெரிவித்ததாக Le Temps செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாதாந்திரத் தொகையை முழுக் காலத்திற்கும் கணக்கிட்டால் செலவு 16 லட்சம் பிராங்குகளைத் தாண்டும். கட்டணம் செலுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டாலும், நிறுத்தப்பட்ட முழுக் காலத்திற்குமான தொகை செலுத்தப்பட்டதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாத விமானத்தை மீண்டும் பறக்கத் தயார்படுத்துவது அதிகச் செலவை ஏற்படுத்தக்கூடும் என ஊடகச் செய்திகள் கூறுகின்றன. அதன் உரிமையுடன் தொடர்புடைய GTLK நிறுவனத்தின் அயர்லாந்து துணை நிறுவனம் கலைப்பு நடவடிக்கையில் இருப்பதால், விமானத்தைப் பிரித்து உதிரிப்பாகங்களாக விற்பனை செய்வது ஒரு சாத்தியமான தீர்வாகக் குறிப்பிடப்படுகிறது.

# சுவிஸ் கடவுச்சீட்டுக்கு உலகளவில் 9 ஆம் இடம்




Passport Reports நிறுவனத்தின் 2026 தரவரிசையில், சுவிஸ் கடவுச்சீட்டு போர்த்துக்கலுடன் இணைந்து உலகளவில் 9ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு இதே பட்டியலில் 7ஆம் இடத்தில் இருந்த சுவிட்சர்லாந்து, இம்முறை இரண்டு இடங்கள் பின்னடைந்துள்ளது.

சுவிஸ் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் 119 நாடுகளுக்கு விசா இன்றி பயணிக்கலாம் என அந்த நிறுவனம் தெரிவிக்கிறது. மேலும் 43 நாடுகளுக்கு சென்றடைந்ததும் விசா பெறும் வசதியும், 11 நாடுகளுக்கு மின்னணுப் பயண அனுமதியுடன் செல்லும் வசதியும் உள்ளன. இவற்றைச் சேர்த்து சுவிட்சர்லாந்தின் பயண அணுகல் மதிப்பெண் 173 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் 25 நாடுகளுக்கு விசா தேவைப்படுகிறது.

ஒக்டோபர் 5 அன்று சரிபார்க்கப்பட்ட புதுப்பிக்கப்பட்ட பட்டியலில், ஐக்கிய அரபு அமீரகம் முதலிடத்திலும், சிங்கப்பூர் இரண்டாம் இடத்திலும், மலேசியா மூன்றாம் இடத்திலும் உள்ளன.



சைவத் தமிழ்ச் சங்கம்
அருள்மிகு சிவன் கோவில்
32 வது ஆண்டு
கலைவாணி விழா
காலம்
25.10.2026
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு
இடம்
அருள்மிகு சிவன் கோவில்
அமிர்தம் நல்நிகழ்வு மண்டபம்
Industriestrasse 34
8152 Glattburgg, Switzerland
044 371 02 42, 078 819 31 09
நிகழ்வுகள்
முத்தேவியர் வழிபாடு
மாணவர்களுக்கான போட்டிகள்
கலைநிகழ்ச்சிகள்
பரிசளிப்பு
அறிவு
அன்பு
அறம்
ஆய்வு
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
சைவத் தமிழ்ச் சங்கம்
இளம் தொண்டர் சபை
044 371 02 42 | 078 819 31 09